உ

கலைசைச் சிலேடை வெண்பா

மூலமும் உரையும்.

பொன் மெடல் பெற்ற
ஸன் ஆப் இந்தியா பிரஸில்
பதிப்பிக்கப் பட்டது

[அணா 6.

T14940
R005E02
T·14940

உ

நா- ஸ்ரீ தை

கலைசைச் சிலேடை

வெண்பா

Komapet

சிவமயம்.

கலைசைச் சிலேடை
வெண்பா.

மூலமும் உரையும்.

தொட்டிக்கலை
சுப்பிரமணிய சுவாமி அவர்களாற்
இயற்ற பட்டது

தேசபந்து பத்திராதிபர்
சதாவதானம்
தெ கிருஷ்ணசாமி பாவலரவர்களாற்
உரை எழுதப்பட்டது.

எஸ். பி. கே. லால் அண்டு கம்பெனி
பொன் மெடல் பெற்ற
லைன் ஆப் இந்தியா பிரஸ்
சூளை சென்னை

இதன் விலை] அ.மா.ப. [அணா 6.

சிவவடிவேலன்றுணை.

கலைசைச் சிலேடை வெண்பா.

இது கலைசையில் எழுந்தருளிய இறைவன்மீது சிலேடை வடிவ வெண்பாக்களாலாகிய நூல் என விரிதலின், மூன்றுசொல் இரண்டு சந்தியாய்த் தொக்க அன்மொழித் தொகையாய் நூற்குக் காரணக்குறியாய் வந்தது. கலைசை ஓர் திருப்பதி; அஃது இடவாகு பெயராய் ஆண்டெழுந்தருளிய இறைவன் மேலாயிற்று. இது தொட்டிக்கலை யென்றும் வழங்கப்படும். கலைசைச் சிலேடை என்பது ஏழாம் வேற்றுமைத் தொகை. சிலேடை வெண்பா என்பது மூன்றாம் வேற்றுமைத்தொகை. சிலேடையென்பது ச்லேஷா வென்னும் ஆரியமொழியின்றிரிபு; இங்ஙனம் வரல் தற்பவம். இதனைத் தமிழணி மரபுணர்ந்தார் பல்பொருட் சொற்றொடரணியென்றும் வடநூலார் ச்லேஷாலங்காரமென்றுங் கூறுவர். சிலேடை யென்பதன் பொருள் தழுவுதலுடைய தென்பது. அஃதாவது உச்சரிப்பில் ஒரு தன்மைத்தாநின்ற சொற்றொ

டர் ஒன்றற்கு மேற்பட்ட பொருளைத் தழுவுதல். இந்நூலுட்கூறுஞ் சிலேடைகள் பிரிமொழிச் சிலேடையின் பாலவாம். பிரிமொழிச் சிலேடையாவது ஒருவகையாகநின்ற சொல்லைப்பிரித்துத் தொகை வேறுபடுத்துப் பல பொருளாகக்கொள்ளுவதாம். வெண்பாவாவது பாவகை நான்கனுள்ஒன்று. அவை வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா என்பன. வெண்பாவை முதற்பாவென்றும் பிராமண சாதிப்பாவென்றும் வழங்குப. அது பலவகைப்படும்; ஆயினும் இந்நூலுட் கூறப்படுவனவெல்லாம் நேரிசை வெண்பாக்களேயாம். நேரிசை வெண்பாவாவது நான்கடியாயிரண்டாமடி யிறுதிச்சீர் தனிச்சொல்லாய்வர, ஒரு விகற்பத்தானுதல் இரண்டு விகற்பத்தானுதல்வருவது. இனிக் கலைசைச்சிலேடை வெண்பாவென்பது தன்னுலாகிய நூற்காகுதலாற் கருவியாகு பெயராமெனவுங்கொள்ளப்படும்.

காப்பு.

கார்மருவு சோலைக் கலைசைச்சி லேடைவெண்பாச்
சீர்மருவக் கூறுந் திறம்வருமே—யேர்மேவுங்
கோதறுமுத் தோடைக் குளத்திருதாட் செங்கழுநீர்ப்
போதகமென் போதகத்தாம் போது.

(இதன் பொருள்.) ஏர்மேவும்-அழகுபொருந்திய, கோது அறு-குற்றமற்ற, முத்து ஓடை-முத்திழைத்த நெற்றிப்பட்டத்தை, குளத்து-நெற்றியில் (அணிந்துள்ள), செங்கழுநீர் போதகம்-செங்கழுநீர் விநாயகரின், இருதாள்-இரண்டு திருவடிகள், என்போது அகத்து-என்து மனத்தாமரையில், ஆகும் போது-எழுந்தருளிய விடத்து, கார்மருவு-மேகங்கள் தவழும், சோலை கலைசை-சோலைகளையுடைய கலைசையில் (எழுந்தருளிய இறைவன் மீது கூறும்), சிலேடை வெண்பா-சிலேடை வெண்பா

வென்னும் இந்நூலை, சீர்மருவ-அழகு பொருந்த, கூறும் திறம்-(யான்) சொல்லும் வன்மை, வரும்-(எனக்கு) உண்டாகும்; என்றவாறு.

வழிபடுகடவுள் வணக்கஞ்செய்து நூலைத்துவக்கினாந்நூல் இனிது முடியுமென்பது ஆன்றோர் வழக்காதலின், இவருந் தனது வழிபடு கடவுளாகிய மூத்தபிள்ளையாரைத் துதித்தனர். கல்வி வன்மையாலொருவற்குப்பாடுந் திறமிருக்கினுமது அருள்பெற்றோர் கவித்திறத்தினுஞ் சீரிய தன்றென்பதைக் குறிக்க 'சீர்மருவக்கூறுந்திறம்வரும்' என்றார். இதனான் ஏனைய வத்துணைச் சிறந்தனவன்று மென்பது போதரும். ஈண்டுச் சீராவது சொன்னேர்க்குப் பொருணேர்க்கு முதலியனவாம். செங்கழுநீர் விநாயகர் என்றது அத்தலத் தெழுந்தருளியுள்ள தலவிநாயகரை. ஓடை-யானை நெற்றிக்கண்ணணியும் ஓராபரணம்; அது பட்டம். போதகம்-யானை. இருதாள் என்னகத் தாம் போது கலைசைச் சிலேடைவெண்பா சீர்மருவக் கூறுந் திறம் வரும் என்பதந்வயம். திறம் எழுவாய், வரும் பயனிலை. குளத்து, அகத்து என்பனவற்றில் அத்துச்சாரியை. ஏ அசை.

வட்டிக் கலைநீர் வடித்தமைப்போர் மன்னுதிருத்
தொட்டிக் கலைவெண்பாச் சொன்மாலை—கட்டிடமெய்ச்
செங்கழுநீ ராம்பலிரு செந்தா மரைமலருந்
தங்கிடுமென் னெஞ்சகத்தே தான்.

(இ-ள்.) இக்கு-கரும்பினை, ஆலை-ஆலையில் (வைத்து), நீர் வடித்து-அதன் சாற்றினைப் பிழிந்து, வட்டு அமைப்போர்-(காய்ச்சி வெல்லத்தை) வட்டமாகச் செய்பவர், மன்னு-பொருந்திய, திரு-அழகு வாய்ந்த, தொட்டிக்கலை-தொட்டிக் கலையென்னுந் திருப்பதியில் (எழுந்தருளிய இறைவனுக்கு), சொல் - சொல்லப்படும், வெண்பா மாலை - வெண்பாவாற் சமைத்த பாமாலையை, கட்டிட-அணிய, மெய்-சச்சிதானந்த சொருபாகிய, செங்கழுநீர் ஆம்பல்-செங்கழுநீர் விநாயகரின், இரு செந்தாமரை மலரும்-செந்தாமரை மலரையொத்த இரு

வடிகள் இரண்டும், என்நெஞ்சு அகம்-என்மனதுள், தங்கிடும்-
(வந்து) பொருந்தும்; எ-று.

(இறைவற்குப் பாமாலை) கட்டிட வாம்பலின் செந்தா
மரைமலர் என்னெஞ்சகத்துத் தங்கிடும் என்பதன்வயம்.
திரு-கண்டாரால் விரும்பப்படுந்தன்மை நோக்கம். இதற்கு
விசேடப்பொருள் பேராசிரியர் “ திருவளர்தாமரை ” என்ற
திருக்கோவையார்ச் செய்யுளின் விசேடவுரையிலுரைத்தாங்
குரைத்துக்கொள்க. ஆம்பல்-யானை. கட்டிடல்-அர்ப்பித்தல்.
இதில் கலைசைச்சிலேடை வெண்பாவென்னு மாலை தொடுப்
பதற்கு மூத்தபிள்ளையாரது திருவடிச் செந்தாமரைமலரை
யாதாரமாகக் கொண்டாரென்னும் சொற் சமத்காரமுந்
தோன்றுமாறுணர்க. மெய் என்பது சத்திற்கும் ஆநந்தத்
திற்கும் உபலக்ஷணமாக நின்றமையின், அவ்விரண்டையுங்
கூட்டிப் பொருளுரைத்தாம். மலர் ஆகுபெயரால் திருவ
டியை யுணர்த்திற்று. அலையென்பது ஆலையென்பதன்
விகாரம். வட்டு-பால் விளங்கா வஃறிணைப்பெயர். மன்னு
உகரச்சாரியைபெற்ற வினைத்தொகை. மலரும் என்ற உம்மை
உயர்வு சிறப்பும்மை, இனைத்தென்றறி பொருளில் வந்த முற்
றும்மையுமாம். தான்-அசை. (உ)

நூல்.

நீருலவும் பூமகளு நெட்டகழின் வார்புனலுங்
காருணிய மீதூர் கலைசையே—யேருலவுந்
தண்டரங்க மாலையார் தாங்குமுடி யார்வரைக்கோ
தண்டரங்க மாலையார் சார்பு.

(இ-ள்.) நீருலவு பூமகளும்-நீரிற்பொருந்திய தாமரையில் வசிக்கும் இலக்குமியும்-சரஸ்வதியும், காருணியம்-கிருபையை, மீதூர்-அதிகரிக்கும், கலைசை-, நெடுமை அகழின்-நீண்டவகழில் (உள்ள), வார்புனலும்-மிகுந்த நீரையும், கார் உண்ணிய-மேகமுண்ண, மீதுஊர்-ஆகாயத்திற் சஞ்சரிக்கும், கலைசை-, ஏர்உலவும்-அழகு பொருந்திய, தண் தரங்கம்-குளிர்ச்சி வாய்ந்த பாற்கடலிற் (பள்ளிகொள்ளும்), மால்-விஷ்ணுவிற்கு, ஐ-தலைவரும், ஆர் தாங்கும்-ஆத்திமாலையணிந்த, முடியார்-முடியையுடையவரும், வரை-மேரு மலையை, கோதண்டர்-வில்லாகவுடையவரும், அங்கமாலையார்-முழுவென்பு மாலையை யணிந்தவருமாகிய இறைவரது, சார்பு-சாருமிடம்; எ-று.

மேருவை வில்லாகக்கொண்டது திரிபுர சம்ஹாரகாலத்து. அங்கமாலை கற்பங்கடோறு மிறக்கும் பெருந்தேவர்களினென்புமாலை. அதிகரிக்கும் கலைசை, சஞ்சரிக்கும் கலைசை எனத் தனித்தனி முடிபுகொள்க. அவற்றின் பொருள், அதிகரிக்கும் பெருமைவாய்ந்த கலைசை, சஞ்சரிக்குங் காட்சியுடைய கலைசை என்பவாம். பின் வருவனவுமன்ன. பூவென்பதீண்டுச் செந்தாமரை வெண்டாமரை மலர்களைக் குறிப்பித்து நின்றது. இலக்ஷ்மியின் கருணை செல்வமுடையராகச் செய்தலும், சரஸ்வதியின் கருணை கல்வியுடையராகச் செய்தலுமாம்; அதிகரித்தல்-மிகச்செய்தல். இரண்டாவது பொருளில் உணியவென விகாரப்பட்டுநின்ற உண்ணிய வென்பது செய்யிய என்னும் வாய்பாட்டு வினையெச்சம். சார்பு ஆகுபெயராய் இடத்தை யுணர்த்திற்று-கலைசை எழுவாய், சார்பு பயனிலை. மூன்றாமடித் தண்டரங்க மாலையார்

தாங்குமுடியார் என்பதற்கு, தண்தாங்கம்-குளிர்ச்சிபொருந்திய கங்கையையும், ஆர்மாலை-ஆத்தி மாலையையும், தாங்குமுடியார் என்றும் பொருள் கொள்ளலாம். ஏ-அசை. (1)

மாதரணி குங்குமமும் வாளேந்து கையினருங்
காதமருக் கூருங் கலைசையே—போதலரும்
அங்கொன்றைத் தாரா ரறிந்துதமைப் போற்றுதார்க்
கங்கொன்றைத் தாரா ரகம்.

(இ-ள்.) மாதர்அணி குங்குமமும்-பெண்கள் தனத்திலணிந்திருக்கும் குங்குமக்குழம்பும், காதம்மருகூரும்-காதவழிதூரம் வாசனைவீசும், கலைசை-, வாள் ஏந்துகையினரும்-வாளாயுதத்தையேந்திய கையையுடைய வீரர்களும், காது அமருக்கு-மூண்ட சண்டைக்கு, ஊரும்-செல்லும், கலைசை-, போது அலரும் - (மலர வேண்டிய) காலத்தில் மலருகின்ற, அம் கொன்றை தாரார்-அழகிய கொன்றைப் பூவாலாய மாலையையணிந்தவரும், தமை அறிந்து-தம்மை யுள்ளவாறு (சுருதியாலும், குருவாலும், சிந்தனையாலும்) உணர்ந்து, போற்றுதார்க்கு-(தம்மைத்) துதியாதவர்க்கு, அங்கு-அவ்வந்திய காலத்தில், ஒன்றை-ஒப்பற்ற மோக்ஷத்தை, தாரார்-கொடாதவருமாகிய இறைவரது, அகம்-வீடு; எ-று.

போற்றலாவது தாம் இனிப் பிறவா நெறியடைவான் வேண்டிய காரியத்தைச் செய்தல். "தோட் கோப்புக்காலத்தாற் கொண்டும்மின்" என்றதும் இக்கருத்தே பற்றியென்க. கொன்றைத்தார் மூன்றும் வேற்றுமை யுருபும் பொருளுமுடன் றொக்கதொகை; முதற் காரணப் பொருள். (2)

வாஞ்சைதரும் பைங்கிளியு மாங்குயில்போல் வார்த்தையக
காஞ்சியிடை யார்க்குங் கலைசையே—யாஞ்சலத்தால் [மூங்
வெற்றிமதிக் கண்ணியான் வீயாம லாண்டருள்
வெற்றிமதிக் கண்ணியான் வீடு.

(இ-ள்.) வாஞ்சைதரும் - விருப்பத்தைக் கொடுக்கும், பைங்கிளியும்-பசியநிறமமைந்தகிளிகளும், காஞ்சிஇடை-காஞ்

சிமரத்தில், ஆர்க்கும்-சப்திக்கும், கலைசை-; மாகுயில்போல் வார்த்தையரும்-மாமரத்துக் குயிலினதிசை போனு மிசை (இனிமை) வாய்ந்த சொல்லினையுடைய பெண்களும், காஞ்சி-காஞ்சி யென்னு மாபரணத்தை, இடை-இடையில், ஆர்க்கும்-கட்டும், கலைசை-, ஆம் சலத்தால்-உண்டாகிய வருத்தத்தால், யான் இவெறு மதிக்கு அண்ணி-நான் இந்த இழிவான வெளிற்றறிவுடன் கூடி, வீயாமல்-கெடாமல், ஆண்ட-ஆட்கொண்ட, அருள் - கிருபையையுடைய, வெற்றிமதி-வெற்றி பொருந்திய சந்திரனை, கண்ணியான் - மாலையாகவுடைய இறைவரது, வீடு-, எ-று.

மாங்குயில்போல் வார்த்தை யென்பது பொதுத் தன்மைத்தொகை யுவமையணி; இனிமை யென்னுஞ் சாதாரண தருமமறைந்திருத்தலின். காஞ்சி ஓர் மரத்திற்கும் பெண்களிடையிலணியும் எண்கோவை யாபரணத்திற்கும் பெயர். பைங்கிளி பண்புத்தொகை; பசுமை கிளியெனப் பிரிபடும். இடை முன் அருத்தத்தில் ஏழனுருபு, பின்னருத்தத்துள் ஆகுபெயராய்ப் பெண்களினடுவிடத்தையுணர்த்திற்று. வெளிற்றறிவு-எப்பொருளைத் தன்மைத்தாயினு மப்பொருளைப்பொருளாகக் காணுந்திரிபுணர்ச்சி. இமதிக்கு-உருபு மயக்கம். மூன்றாமடியிலுள்ள வெற்றிமதிக்கண்ணி என்பதற்கு வெறு இமதிக்கு அண்ணி யெனப் பிரித்துப் பிரயோசனமற்ற இயமதிக்கைச் சேர்ந்து என்றும் பொருள் கொள்ளலாம். சந்திரனுக்கு வெற்றி-தக்கன் சாபத்தினின்று நீங்கினமை. வீடு முதனிலை திரிந்த தொழிலாகுபெயராயிடத்தை யுணர்த்திற்று. (3)

ஆவலுடன் பாவலரு மாறுகால் வண்டினமுங்
காவலரைச் சூழுங் கலைசையே—மேவும்
அரிவையம்பா கத்தா னரனொருமூன் றெய்தோன்
அரிவையம்பா கத்தா னகம்.

(இ-ள்.) ஆவலுடன்-ஆசையுடன், பாவலரும்-பண்டிதர்களும், காவலரை-அரசரை, சூழும்-சூழ்ந்திருக்கும், கலைசை-, ஆறுகால் வண்டு இனமும்-ஆறு கால்களையுடைய வண்டின்

கூட்டமும், கா-சோலைக்கண்ணுள்ள, அலரை-புஷ்பங்களை, சூழும்-சூழ்ந்திருக்கும், கலைசை-, மேவும்-(அபயமென) வந்த, அரி-விஷ்ணுவை, வை அம்பு ஆக-கூர்மையான அம்பாகக் கொண்டு, தான்-தானே, ஒரு மூன்று அரண்-ஒப்பற்ற மூன்று கோட்டைகளை, எய்தோன்-(நீறும் வண்ணம்) பிரயோகித்த வரும், அரிவை-உமையம்மையை, அம்பாகத்தான்-(தமது) அழகிய இடது பக்கத்திலுடையவருமாகிய இறைவரது, அகம்-, எ-று.

தேவர்கட்குத் திரிபுரர்களா லிடுக்கணுண்டாக, அவர்கள் விஷ்ணுவிடமோடிமுறையிட அவர் சிவபிரானிடம் அபயமடைய, அப்போது மேருவை வில்லாகவும் ஆதிசேஷனை நாணாகவும் விஷ்ணுவை அம்பாகவும் பூமியைத் தேர்த்தட்டாகவும் சூரிய சந்திரரைத் தேருருளையாகவுங் கொண்டு பெருமானார் திரிபுரத்தையழித்தார் என்பது புராண வரலாறு. காவலர்-காப்பதில் வல்லவர், பாவலர்-பாட்டில் வல்லவர், இவை காரணப்பெயர்கள். (4)

இச்சைமட வார்தனமு மீட்டறத்தி னோர்தனமுங்
கச்சங் கடக்குங் கலைசையே—மெச்சிவட
ஆலமருந் தண்ண லறுகணிவோன் வந்தெழுந்த
ஆலமருந் தண்ண லகம்.

(இ-ள்.) இச்சைமடவார் தனமும்-விருப்பந்தரும் பெண்களினது முலையும், கச்சு அங்கு அடக்கும்-இரவிக்கையினை யவ்விடத்துக் கீழ்ப்படுத்தும், கலைசை-, அறத்தினோர்-தரும சீலர்கள், ஈட்டு தனமும் - அறவழியாற் சம்பாதித்த திரவியமும், கச்சம் கடக்கும்-அளவை யடக்கும், கலைசை-, மெச்சி-விரும்பி, வடஆல்அமரும்-வடவால மரத்தடியில் எழுந்தருளும், தண்நல் அறுகு அணிவோன்-குளிர்ந்தநல்ல அறுகம் புல்லை முடியிலணிந்து கொள்பவரும், வந்து-(பாற் கடலில்) தோன்றி, எழுந்த-(எல்லாத் தேவரையுங் கொல்ல) எழுந்த, ஆலம்-விஷத்தை, அருந்து அண்ணல்-உண்டருளிய சிரேட்டருமாகிய இறைவரது, அகம்-; எ-று.

வடவாலமர்ந்தது சனகாதியர்க்குபதேசிக்கும்பொருட்டு. ஆலமருந்தியது திருப்பாற்கடலிற்றேவர்களமுதங்கடைந்த போதவர்களைக் கொல்லவெழுந்த விஷத்தைக் கண்டவர்கள் பயந்துவந்து முறையிட்டபோது. (5)

நாவலர்தம் புத்திரரு நண்ணும் பிரமரமுங்
காவியங்க ளாயுங் கலைசையே—தூவெள்ளைக்
கோட்டுக் குழையார் கொழுங்கயற்கண் மெல்லியலாங்
கோட்டுக் குழையார் குடி.

(இ-ள்.) நாவலர்தம் புத்திரரும்-பண்டிதருடைய பிள்ளைகளும், காவியங்கள்-நன்னூற்களை, ஆயும்-ஆராயும், கலைசை-, நண்ணும் பிரமரமும்-சேரும் வண்டுகளும், கா-சோலையில், வி-பூக்களின், அம் கள்-அழகிய மதுவை, ஆயும்-உண்ணும், கலைசை-, தூவெள்ளை-பரிசுத்தம் பொருந்திய வெண்மையமைந்த, கோடு குழையார்-சங்க குண்டலங்களை யுடையவரும், கொழும்-வளவிய, கயல் கண்-கயல்போலும் பிறழுங் கண்ணிணையுடைய, மெல்இயல் ஆம்-மிருதுத் தன்மை வாய்ந்த, கோடு உகு-கொம்பினை யொத்த உமாதேவியார்க்கு, உழையார் - பக்கத்திலுள்ளவருமாகிய சிவபெருமானாரது, குடி-வசிக்குமிடம்; எ-று. (6)

தண்ணார் பொழிற்சுரும்புந் தத்தைமொழி யார்கதுப்புங்
கண்ணாடி வீழுங் கலைசையே—யொண்ணாரும்
வான்முத் தலைவேலை மைக்கடுவுண் டோன்கரத்தில்
வான்முத் தலைவேலை வாழ்வு.

(இ-ள்.) தண் ஆர் பொழில்-குளிர்ச்சி யமைந்த சோலைகளில், சுரும்பும்-வண்டுகளும், கள்நாடி - (மலரின்கணுள்ள) மதுவை விரும்பி, வீழும்-(அதன் மேல்) வீழும், கலைசை-, தத்தை மொழியார்-கிளியைப் போலு மொழியினையுடைய பெண்களின், கதுப்பும்-கன்னமும், கண்ணாடி வீழும்-கண்ணாடியை யொக்கும், கலைசை-, ஒள்நாரும் - ஒளிபொருந்திய, வால்முத்து-வெள்ளிய முத்துக்களை, அலை-(கரையில்) ஒதுக்கும், வேலை-பாற்கடலின் (வந்த), மை-கருநிறமமைந்த, கடு

உண்டோன்-விஷத்தைச் சாப்பிட்டவரும், கரத்தில்-கையில், வால்முத்தலைவேல் - சிறந்த மூன்று குடுமியமைந்த சூலாயுதத்தையுடைய, ஐ-கடவுளுமாகிய இறைவரது, வாழ்வு-வாழுமிடம்; எ-று. (7)

பொற்புரிசை நீள்கொடியும் போர்வயவர் திண்புயமுங்
கற்பகமே லோங்குங் கலைசையே—யெற்புருக
நந்தாண்ட வத்த னளினத்தன் வீழ்ந்திறைஞ்சு
நந்தாண்ட வத்த னகர்.

(இ-ள்.) பொன்புரிசை-பொன்மயமானமதில்களிலுள்ள, நீள்கொடியும்-நீண்டகொடிகளும், கற்பகம்-கற்பகவிருக்ஷத்தினது, மேல்-மேலே, ஓங்கும்-உயர்ந்திருக்கும், கலைசை-, போர்வயவர்-யுத்தவீரர்களின், திண்புயமும்-வலியபுயங்களும், கல்பக-கல்லும் பிளவுபட, மேல் ஓங்கும்-மிகவுயர்ந்திருக்கும், கலைசை-, என்பு உருக-எலும்புமுருக, நந்து ஆண்ட அத்தன்-பாஞ்சசன்னியமென்னும் சங்கினைக் கரத்திலுடைய விஷ்ணுவும், நளினத்தன்-செந்தாமரைமலர்வாசியாகிய பிரமனும், வீழ்ந்து-(திருவடியில்) வீழ்ந்து, இறைஞ்சும்-வணங்கும், நம்-நமது,தாண்டவத்தன் - நிர்த்தனஞ் செய்யும் இறைவரது, நகர்-எ-று. (8)

சிந்து மதமாவுந் தேனுகர்மா வும்பூவிற்
கந்தங் கலைக்குங் கலைசையே—தந்தாட்
குருக்கங் கணத்திலு னுற்றிடச்செய் தோன்பாம்
புருக்கங் கணத்திலு னூர்.

(இ-ள்.) மதம் சிந்துமாவும்-மதத்தைப்பொழியும் யானைகளும், கந்து-கட்டுத்தறியை, அங்கு - அங்குள்ள கூடத்தில், அலைக்கும்-முறிக்கும்,கலைசை-, தேன் நுகர்-மதுவையுண்ணும், மாவும் - வண்டுகளும், பூவில்-புஷ்பத்திலுள்ள, கந்தம்-வாசனையை, கலைக்கும் - கெடுக்கும், கலைசை-, தம்தாட்கு-தம்முடைய திருவடிக்கண், உருக்கம் - அன்பு, கணத்தில்-க்ஷணப்பொழுதில், நான்உற்றிட-நான் அடைய, செய்தோன்-கிருபை

புரிந்தவரும், பாம்பு உரு-சர்ப்பவடிவ, கங்கணத்திரன்-கடகத்தைக் கையிற்றரித்தவருமாகிய இறைவரது, ஊர், எ-று.

வள்ளமுலை யார்விழியும் மைக்கா மதுகரமுங்
கள்ளம் பயிலுங் கலைசையே—யுள்ளவலம்
போகத் திருந்தார் புரமெரித்தார் தேவியொடும்
போகத் திருந்தார் புரம்.

(இ-ள்.) வள்ளம்-கிண்ணத்தையொத்த, முலையார்-முலைகளையுடைய பெண்களின், விழியும்-கண்களும், கள்ளம்-வஞ்சகத்தை, பயிலும்-பொருந்தியிருக்கும், கலைசை-, மை-இருண்ட, கா-சோலைக்கணுள்ள, மது கரமும்-வண்டுகளும், கள் அம்பு-மதுநீரை, அயிலும்-உண்ணும், கலைசை-, உள்-மனதின், அவலம்போக-தீமைகெட, திருந்தார்-பகைவராகிய அசுரரின், புர மெரித்தார்-திரிபுரத்தை யெரித்தவரும், தேவியொடும்-உமையம்மையொடும், போகத்து இருந்தார் - (ஆன்மாக்களினிமித்தம்) போகத்திலிருந்தவருமாகிய இறைவரது, புரம்-ஊர்; எ-று.

உள்ளவலம் என்பதை உள்ள வலம் எனப்பிரித்து இருக்கும் பலமும் எனப் பொருள் கொள்ளுதலுமாம். (10)

வான்மிசையே றும்பொழிலு மானார் குழலுமலர்க்
கான்மணந்து வக்குங் கலைசையே—மேன்மைதருங்
பாலத் திருக்கழலார் பண்டிருவர்க் காடியகா
பாலத் திருக்கழலார் பற்று.

(இ-ள்.) வான்மிசை - ஆகாயத்தின்மீது, ஏறும்பொழிலும்-உயர்ந்திருக்குஞ்சோலைகளும், மலர்மணம்-புஷ்பங்களின் வாசனையை, கால் துவக்கும்-காற்றால் வெளிப்படுத்தும், கலைசை-, மானார்-மானின்பார்வைபோன்று மருட்சிவாய்ந்தபார்வையினையுடைய பெண்களின், குழலும்-கூந்தலும், மலர் கான்-மலரின்வாசனையை, மணந்து-சேர்ந்து, உவக்கும்- சந்தோஷப்படுத்தும், கலைசை-, மேன்மை தரும்-உயர்வைக்

கொடுக்கும், பாலம்-நெற்றியில், அழல் இருக்கார்-அக்கினிக் கண் பொருந்தியவரும், பண்டு-முன், இருவர்கு - பதஞ்சலி வியாக்கிரபாதரென்னு மிருவருக்காக, காபாலம் ஆடிய-கா பாலமென்னுங் கூத்தையாடிய, திருகழலார்-அழகிய திருவடி யையுடையவருமாகிய இறைவரது, பற்று-இடம்; எ-று.

மானார்குழலுமலர்க்கான் என்பதன்கணுள்ள மலர்க்கான் என்பதை கால்மல ரெனக்கொண்டு காம்புடன் கூடிய மல ரெனவும் பொருள் கொள்ளலாம். (11)

பாயாத மானாரைம் பாலும் பசுந்தோளுங் [ல்
காயாவே யொக்குங் கலைசையே—யேய்புலித்தோ
அம்பரவ னானா னணிவலைகொண் டங்கொருநாள்
அம்பரவ னானா னகம்.

(இ-ள்.) பாயாத மானார்-பெண்களின், ஐம்பாலும்-கூந்த லும், காயா எ ஒக்கும்-காயாம் பூவினிறத்தையே யொத்திருக் கும், கலைசை-, பசும் தோளும்-பசிய தோள்களும், காயாத- காயாத (பச்சையான), வேய்-மூங்கில், ஒக்கும்-ஒத்திருக்கும், கலைசை-, எய் புலித்தோல்—பொருந்திய புலியதளை, அம்பர வன்-ஆடையாகவுடையவரும், ஆன் ஆன் - ரிடபத்தையுடை யவரும், அணிவலை கொண்டு - அழகிய மீன் வலையைக் கொண்டு, அங்கு—மதுரையில், ஒரு நாள்-, அம்-அழகிய, பாவனானார் - செம்படவனானவருமாகிய இறைவரது, அகம்- இடம், எ-று.

காட்டுமான்கள் பாய்தலுடையன வாதலின் அவற்றி னின்றும் நீக்கும் பொருட்டுப் பாயாத மானென்றார். இது பிறிதினியைபு நீக்கிய விசேடணம்; பறவாக்கொக்கு என்றாற் போல. இங்ஙனம் வருவனவெல்லாம் குறிப்பாற் பொருளு ணர்த்துவனவாம்; குறிப்பு விபாவனை யணியின்பாற்படும். கூந்தலை ஐம்பால் என்றது; பணிச்சை, குழல், கொண்டை, முடி, சுருள் என்றைந்து பகுப்பாதற்றன்மைக் கேதுவா யிருத்தற்பற்றியாம். (12)

சேலார் செழுந்தடத்திற் செந்தா மரையினிற்றேன்
காலாறு பாயுங் கலைசையே—சூலேறு
பாணியார் வேணியார் பாகீ ரதியென்னும்
பாணியார் வேணியார் பற்று.

(இ-ள்.) சேல்ஆர்-சேற்கண்டைகள் பொருந்திய, செழும் தடத்தில்-செழுமையாகிய தடாகத்தில், கால் - வாய்க்கால் (வழியாக), ஆறுபாயும்-ஆறுகள்பாயும், கலைசை-, செந்தாமரை யினில்-செந்தாமரைப்பூவின்கண், தேன்-தேனை (அருந்த), கால்ஆறு-வண்டுகள், பாயும் - படியும், கலைசை-, சூல்ஏறு-சூலாயுதத்தைத் தாங்கிய, பாணியார்-கையையுடையவரும், வேணி - ஆகாயத்தில், ஆர்-பொருந்திய, பாகீரதி என்னும்-பாகீரதியென்று சொல்லப்படும், பாணி-கங்கையையும், ஆர்-ஆத்திமாலையையும், வேணியார் - சடையிலுடையவருமாகிய இறைவரது, பற்று-, எ-று.

சேலார் செழுந்தடத்திற் றேன், கால்ஆறு - காலின் வழியாய், பாயும் - (வயலுக்குப்) பாயும் என்றும் பொருள் கொள்ளலாம். காலாறு - காரணப்பெயர். பாகீரதி - தத்தி தாந்தபதம், பாகீரதன்றவத்தா லெய்தியதென்பது அதன் பொருள். முன்னுள்ள வேணியார் என்பதற்குச் சிதாகாய ஸ்வரூபர் என்று பொருள்கூறினுமொக்கும். (13)

இது முச்சிலேடை.

தாமரைவண் டுங்குளமுஞ் சார்விரகத் தாரிடமுங்
காமரம்பா டுஞ்சீர்க் கலைசையே—மாமதமா
தங்க முரித்தார் தடங்கேழற் கோட்டினைச்சூர்
தங்க முரித்தார் தலம்.

(இ-ள்.) தாமரைவண்டும் - தாமரைப்பூவிலிருக்கும் வண்டும், காமரம்-காமரம் என்னுமிசையை, பாடும்-இசைக்கும், கலைசை-, குளமும் - குளங்களிலும், காமர் - அழகிய, அம்பு-நீர், ஆடும்-அசையும், கலைசை-, சார் - பொருந்திய, விரகத்தார் இடமும்-விரகவேதனையுடைய காமிகளிடத்தும், காமர்-மன்

ம்தனது, அம்பு-பாணம், ஆடும்-வருத்தும், கலைசை-, மா-கரிய, மத மாதங்கம்-மதம்பொருந்திய யானையை, உரித்தார்-உரித்தவரும், தடம்கேழல்-பெரியபன்றியின், கோட்டினை-கொம்பை, சூர்தங்க-அச்சமுற, முரித்தார்-ஒடித்தவருமாகிய இறைவரது, தலம்-இடம்; எ-று.

சீர்க்கலைசை யென்புழிச்சீர் சிறப்பென்னும் பொருளது.

(1) சிவபெருமான், கயாசுரனென்பவன் செருக்குற்றுத் தேவர்களை வருத்தித் தன்னோடெதிர்த்தாரியாவரையும் வாழைப்பழம்போலெடுத்து விழுங்கி யுலகத்திற்குப் பெருங்கேடுண்டாக்கிவருவதை யுணர்ந்தவனைக் கொன்று, அவனது தோலையுரித்துப் போர்த்துக்கொண்டன ரென்பதும்,

(2) இரணியாட்சனென்பவன் பூமியைப் பாய்போற் சுருட்டிப் பாதாளத்திற்குச் சென்றதறிந்து அவனை வராகவுரு (பன்றிவடி)வங் கொண்டுசென்றழித்த திருமால் தம்மினு மிக்காரில்லையென் றகங்கரித்துத் திரிவதையுணர்ந்த சிவபெருமான் அப்பன்றியின் கொம்பைப்பறித்துக் கர்வபங்கம்பண்ணினாரென்பதும் புராணக்கூற்று.

மண்டமர்செய் யுங்களமும் வான்கரும்பை மள்ளருஞ்சேர்
கண்டகரச் சாடுங் கலைசையே—தொண்டர்
கணிச்சித் திருக்கையான் காதரத்தைத் தீர்க்குங்
கணிச்சித் திருக்கையான் காப்பு.

(இ-ள்.) மண்டு அமர்செய்யும்-நெருங்கிச் சண்டைசெய்யும், களமும்-உயுத்தகளத்தும், கண்டகர்-பகைவரின், அச்சு-உயிர், ஆடும்-அசையும், கலைசை-, வான்கரும்பை - பெரிய கரும்புகளை, மள்ளரும்-பள்ளர்களும், சேர்-பொருந்திய, கண்-கணுக்கள், தகர-உடைய, சாடும்-மோதும், கலைசை-, தொண்டர்கண் - அடியவரிடத்து, இச்சித்து - விரும்பி, இருக்கையான் - இருத்தலையுடையவனும், காதரத்தை - (அவர்) துன்பத்தை, தீர்க்கும்-நீக்கும், கணிச்சி - மழுவாயுதமேந்திய,

திருகையான்-அழகிய கையையுடையவருமாகிய இறைவாது, காப்பு-, எ-று. (15)

தொண்டைக் கனிவாயார் சொல்லு நயனமுந்தேன்
கண்டவியப் பண்ணுங் கலைசையே-தண்டமிழ்சேர்
வண்டணிகைச் சத்தியத்தன் வாரணத்த னத்தனித்தன்
வண்டணிகைச் சத்தியத்தன் வாழ்வு.

(இ-ள்.) தொண்டைக்கனி - கொவ்வைக்கனியொத்த, வாயார்-வாயினையுடைய பெண்களின், சொல்லும் - சொற்களும், தேன்-தேனையும், கண்டு-கற்கண்டையும், அவிய-(இனிமையிற்) கெட, பண்ணும் - செய்யும், கலைசை-, நயனமும்-(அவர்கள்) கண்ணும், தேன்-வண்டை, கண்ட - பார்த்த, வியப்பு-ஆச்சரியத்தை, அண்ணும் - பொருந்தும், கலைசை; தண்தமிழ்சேர் - (மனக்) குளிர்ச்சியையுண்டாக்கு மினிமை பொருந்திய,வண்தணிகை-வளவிய தணிகாசலத்திலெழுந்தருளிய, சத்தி-வேலை, அத்தன்-கையிலுடைய குமாரக்கடவுளுக்கும், வாரணத்தன்-யானைமுகத்தையுடைய விநாயகருக்கும், அத்தன் - பிதாவும், நித்தன் - என்றுமழியாதுள்ளவரும், வண்டு-வளையலை, அணி-அணிந்த, கை-கையையுடைய, சத்தி-உமையம்மையை, அத்தன் - அர்த்தபாகத்திலுடையவருமாகிய இறைவாது, வாழ்வு-வாழுமிடம்; எ-று. (16)

பன்மறைதேர் பூசுரரும் பாறுதலில் வாழ்க்கையருங்
கன்மந் திரஞ்செய் கலைசையே—முன்மதனார்
ஐயம் புதையா ரறிவகல வென்னுளத்தில்
ஐயம் புதையா ரகம்.

(இ-ள்.) பல்மறைதேர் பூசுரரும்-பல வேதங்களையாராயும் பிராமணர்களும், கன்மம்-(தங்கணித்திய) கருமங்களை, திரம்செய்-தவறுமற்செய்யும், கலைசை-, பாறுதல்இல்-கெடுதலில்லாத, வாழ்க்கையரும்-இல்வாழ்க்கையிலுள்ள செல்வர்களும், கல் மந்திரம்-மாணிக்கக்கற்களால்வீட்டை, செய் - கட்டும், கலைசை-, முன்-(தக்ஷிணாமூர்த்தி கோலங்கொண்ட) அப்

போது, மதனார் - மன்மதனது, ஐஅம்பு - முல்லை, அசோகு, நீலம், மா, தாமரையென்னும் பஞ்சபாணங்களும், தையார்- (தமது திருமேனியில்) தைக்கப்பெறுதவரும், அறிவுஅகல- ஞானம்நீங்க, என்உளத்தில்-எனது மனத்தில், ஐயம்புதை யார்-சந்தேகத்தை வைக்காதவருமாகிய இறைவரது, அகம்-, எ-று. (17)

வல்லா ரிளமுலையார் வாள்விழியு நீள்வயலுங்
கல்லாரங் காட்டுங் கலைசையே—பொல்லாக்கா
மத்தகத்திற் கண்ணார் மருவுவதற் கண்ணார்
மத்தகத்திற் கண்ணார் மனை.

(இ-ள்.) வல்ஆர்-சொக்கட்டான்காயை ஒத்த, இளமுலை யார் - இளமைத்தன்மைவாய்ந்த தனத்தையுடைய பெண்க ளின், வாள்விழியும் - வாளையொத்த கண்களும், கல்லார்- கற்றறிவில்லாதவரை, அங்கு - (தம்மைக்கண்ட) அவ்விடத் தில், ஆட்டும்-வருத்தும், கலைசை-, நீள்வயலும்-நீண்டவயல் களும், கல்-இரத்தினக்கற்களையும், ஆரம் - முத்துக்களையும், காட்டும் - காண்பிக்கும், கலைசை-, பொல்லாத காமத்து அகத்தில் - கொடிய காமத்தினிடத்து, கண்ணார்-கருத்தை யுடையவர், மருவுவதற்கு-சமீபித்தற்கு, அண்ணார்-சமீபிக்கா தவரும், மத்தகத்தில் - நெற்றியில், கண்ணார் - கண்ணை யுடையவருமாகிய இறைவரது, மனை-வீடு: எ-று. (18)

கொந்துகுழற் கோல்வளையார் கொங்கையுநற் பாகருந்திண்
கந்துகத்தே ரோட்டுங் கலைசையே—சந்தனையுஞ்
செப்பினகி லத்தார் செழுமனையில் வந்திரந்தோர்
செப்பினகி லத்தாரின் சேர்வு.

(இ-ள்.) கொந்துகுழல் - கோதிய கூந்தலையும், கோல் வளையார் - சித்திரித்த வளையலையுமுடைய பெண்களின், கொங்கையும்-தனமும், கந்துகத்து-பந்தினது, ஏர்-அழகை. ஓட்டும்-துரத்தும், கலைசை-, நல்பாகரும்-(சாரதித்தொழிலில்) வல்ல தேர்ப்பாகரும், திண்கந்துகம்-வலிய குதிரைகள் (பூட்

டிய), தேர்ஓட்டும் - தேரினைச்செலுத்தும், கலைசை-; சந்து அணையும்-சந்தனக்குழம்பைத்தரித்த, செப்பின் - கலசத்தை யொத்த, நகிலத்தார்-முலைகளையுடைய ருஷிபத்தினிகளது, செழுமனையில் - வளவியவீட்டில், வந்து இரந்தோர் - பிக்ஷாடனராகவந்தியாசித்தவரும், செப்பின்-(ஆராய்ந்து) சொல்லுமிடத்து, அகிலத்தாரின் - எல்லாமாயுள்ளவருமாய இறைவரது, சேர்வு-சேருமிடம். எ-று.

ருஷிகளென்றது தாருகாவனத்துருஷிகளை. சிவபெருமான் அவர்களது தவச்செருக்கையடக்க பிக்ஷாடனராகக் கோலங்கொண்டாரென்பது புராணவரலாறு. நகிலம்-தனம். கந்துகம்-பந்து, குதிரை. சேர்வு தொழிலாகுபெயர். (19)

தேன்மருவும் பண்ணைகளுஞ் செல்வர் திருமனையுங்
கான்முளைகண் மாறாக் கலைசையே—வான்மே
விருப்பு வணத்தார்க ணேந்தடியார் காய்ந்த
விருப்பு வணத்தா ரிடம்.

(இ-ள்.) தேன்மருவும்-வண்டுகள் சேர்ந்துள்ள, பண்ணைகளும்-வயல்களிலும், கால்முளைகள்-வெளிப்பட்ட நென்முளைகள், மாறாத-நீங்காத, கலைசை-, செல்வர் - தனவான்களின், திருமனையும்-அழகிய வீட்டிலும், கான்முளைகள் - புத்திரர், மாறாத-நீங்கப்பெறாத, கலைசை-, வான்மேவு இருப்பு - ஆகாயத்திற்பொருந்தி யிருத்தலையுடைய, உவணத்தார் - கருடவூர்தியாகிய திருமாலுடைய, கண் ஏந்து - (மலராகக்கினைத் தணிந்த) கண்ணை (மலராகத்) தரித்துக்கொண்ட, அடியார்-திருவடியை யுடையவரும், காய்ந்த இருப்பு-பழுக்கக்காய்ச்சிய இரும்பினது, வண்ணத்தார் - (செந்)நிறத்தை யுடையவருமாகிய இறைவரது, இடம்-; எ-று.

இருப்பு இரும்பென்பதன் விகாரம். (20)

முத்துநகை யார்குழல்சேர் மொய்யளியும் வீருநற்
கத்திகையிற் சுற்றுங் கலைசையே—மித்தையுறும்

வண்டருக்கப் பாலார் மறைப்பொருணல் வர்க்குரைத்த
வண்டருக்கப் பாலார் மனை.

(இ-ள்.) முத்துநகையார்-முத்தைப்போன்ற பல்வரிசையினையுடைய பெண்களின், குழல்சேர்-கூந்தலிற்பொருந்திய, மொய்அளியும்-நெருங்கிய வண்டினங்களும், கத்திகையில்-(அவர் கூந்தலிலணிந்துள்ள) மாலைகளில், சுற்றும்-சூழ்ந்திருக்கும், கலைசை-, வீரரும்-உயுத்தவீரர்களும், நல் கத்தி - கூரிய கத்தியை, கையில்சுற்றும் - கையினாற் சுழற்றும், கலைசை-, மித்தைஉறும்-பொய்யைமேற்கொண்ட, வண்டருக்கு-கீழ்மக்கட்கு, அப்பாலார்-எட்டாதவரும், மறைபொருள்-வேதார்த்தத்தை, நால்வர்க்கு-சனகாதியர்க்கு, உரைத்த-(சொல்லாது) சொல்லிய, வண்-வளவிய, தருக்கப்பாலார் - ஆராய்ச்சியின் பாற்பட்டவருமாகிய இறைவரது, மனை-; எ-று.

நால்வர்-சனக, சனந்த, சனாத, சனற்குமாரர்கள். இவர்களெப்பொழுதும் இளமைப்பருவமுடையராய் உமையம்மையாரது தொடையிலேயே வீற்றிருப்பவர்கள். நால்வர் தொகைக்குறிப்புச்சொல். வண்டருக்கப்பாலார் மனையென்பதற்கு வண்-வளவிய, கப்பு-கிளைகளையுடைய, ஆல்தருஆர்-வடவாலமரத்தின்கீ ழெழுந்தருளிய தக்ஷிணாமூர்த்தியினது, மனையென்றும் பொருள்கொள்ளலாம். (21)

திக்குலவுங் கண்ணருஞ் சித்திரயாழ் வல்லோருங்
கைக்கிளைபா ராட்டுங் கலைசையே—மிக்க
திருமாதங் கத்தூரியார் செம்பொனக மீன்ற
திருமாதங் கத்தூரியார் சேர்வு.

(இ-ள்.) திக்கு உலவும் - நாலாபக்கங்களிலும் பரவிய, கண்ணரும்-பார்வையையுடைய பெண்களும், கைக்கிளை-ஒருதலைக்காமத்தை, பாராட்டும்-மேற்கொள்ளும், கலைசை-, சித்திரம்யாழ்-அழகிய வீணைவாசிப்பதில், வல்லோரும் - வல்லவரும், கை-தம் கையில், கிளை-நரம்பை, பாராட்டும்-உளர்த்தும், கலைசை-, மிக்கு அதிரும்-மிகுதியாகப் பிளிறிடும், மாதங்கத்து

உரியார்-யானையினதுதோலை யாடையாகவுடையவரும், செம்பொன் நகம் ஈன்ற-செவந்தபொன் (மேரு)மலைபெற்ற, திருமாது-அழகியஉமையை, அங்கத்து உரியார் - தமது இடது பாகத்தி லுடையவருமாகிய இறைவரது, சேர்வு-; எ-று;

கண்ணூர் கைகிளை பாராட்டும் என்பதற்குப் பெண்கள் கையில் கிள்ளை (கிளி)யை வளர்க்கும் என்றும், யாழ்வல்லோர் கைக்கிளை பாராட்டும் என்பதற்கு யாழ்வல்லவர் கைக்கிளை யென்னும் பண்ணைப்பாடும் என்றும் பொருள்கொள்ளலாம்.

அச்சா னகியனையா ரங்கைகளுங் கொங்கைகளுங்
கச்சூர முந்துங் கலைசையே—நச்சாரக்
கண்டங் கறுத்தார் கரத்தைத்தீ யின்செருக்கைக்
கண்டங் கறுத்தார்தங் காப்பு.

(இ-ள்.) அச்சானகி அனையார் - (அழகில்) அந்தச் சீதையையொத்த பெண்களின், அம் கைகளும் - அழகிய கைகளும், கச்சூரம் உந்தும் - கழற்சிக்காயைச் செலுத்தும் (எழாங்கா யென்றிப்போது வழங்கும் கழற்சிக்காயாட்டம் ஆடுகின்ற), கலைசை-, கொங்கைகளும் - (அவர்கள்) தனங்களும், கச்சுஊர-இரவிக்கைகிழிய, முந்தும்-(பூரித்து) முன்வரும், கலைசை-, நச்சுஆர - விஷம்பொருந்த, கண்டம் கறுத்தார் - கண்டத்திற் கருநிறம் வாய்க்கப்பெற்றவரும், தீயின் செருக்கை-அக்கினியின் கர்வத்தை, அங்குகண்டு-அத்தக்கன் வேள்வியிற் பார்த்து, கரத்தை - (அவன்) கையை, அறுத்தார்தம்-வீரபத்திரகோலங்கொண்டறுத்தவருமாகிய இறைவரது, காப்பு-; எ-று. (23)

வம்பலர்தார் வேந்தர் மதகரியும் வாவிகளுங்
கம்பலையோ டேருங் கலைசையே—செம்பதுமத்
தானத்தன் றானத்தன் றங்கட் கிறைவனுசாத்
தானத்தன் றானத்தன் சார்பு.

(இ-ள்.) வம்பு அலர்தார் வேந்தர் - வாசனையுள்ள மலர்களாற்றொடுத்த மாலையணிந்தவரசர்களின், மதம்கரியும்-மதம்

பொருந்திய யானையும், கம்பலையொடு ஊரும் - ஆரவாரத்துடன் (வீதியிற்) செல்லும், கலைசை-, வாவிகளும் - தடாகங்களும், கம்பு, அலையோடுஊரும்-சங்கையலைகளால் கரையில்) ஒதுக்கும், கலைசை-, செம்பதுமத்தான் - செந்தாமரைமலர்வாசியாகிய பிரமன், நத்தன்-சங்கேந்திய விஷ்ணு, தானத்தன்-சுவர்க்கலோகத்தையுடைய இந்திரன், தங்கட்கு-(ஆகிய) இவர்கட்கு; இறைவன்-தலைவரும், உசாத்தானத்தன்-திருவுசாத்தானமென்னும் பதியிலெழுந்தருளி யிருப்பவரும், தான்அத்தன்-தாமே தமக்குத் தலைவருமாகிய இறைவரது, சார்பு. ()

வேம்பாகி னின்மொழியார் மென்றோளுஞ் செவ்விதழுங்
காம்பீர மல்குங் கலைசையே—பாம்பார்
அகலத்தா ணண்டான்பெண் ணானென் மம்மர்
அகலத்தா ணண்டா னகம்.

(இ-ள்.) வேகும் பாகின் - வெந்த வெல்லப்பாகினைப் போன்ற, இன்மொழியார்-இன்சொல் வாய்ந்த பெண்களின், மென்தோளும் - மெல்லியதோளும், ஈரம்காம்பு-பச்சைமூங்கிலை, அல்கும் - (உருவத்திற்) கீழ்ப்படுத்தும், கலைசை-, செம்மை இதழும் - (அவர்கள்) செவந்த வதரங்களும், காம்பீரம்-முருக்கம்பூவை, மல்கும்-ஒக்கும், கலைசை-, பாம்புஆர் அகலத்தான்-சர்ப்பாபரணமணிந்த மார்பையுடையவரும், தான் ஆண்பெண்ஆனான்-தாமே ஆணும் பெண்ணுமானவரும், என் மம்மர் அகல - எனது மயக்கம்நீங்க, ஆண்டான் - அடிமை கொண்டவருமாகிய இறைவரது, அகம்-; எ-று. தான் அசை.

அதரம்-வாயிதழ் (உதடு). ஆண்பெண் ஆனான் என்பதற்கு அர்த்தநாரீசுவரவடிவமானானென்று பொருள்கூறினுமமையும். (25)

மான்றமட வார்குழலும் வண்டரளஞ் சங்கினமுங்
கான்றங் கிவருங் கலைசையே—தேன்றங்
கருக்கங் கணியா யறிவுடைமை யார்மெய்
யருக்கங் கணியா ரகம்.

(இ-ள்.) மான்ற-மாட்சிமையுடைய, மடவார் - மடப்பம் பொருந்திய பெண்களின், வார்குழலும் - நீண்ட கூந்தலும், கான்-மலர்மணம், தங்கி-பொருந்தி, வரும்-வீசும், கலைசை-, சங்கு இனமும்-சங்கின் கூட்டமும், வண் தாளம்-வளவியமுத் துக்களை, கான்று-கக்கி, அங்கு-(தடாகத்தின்) அக்கரையில், இவரும் - ஏறும், கலைசை-, தேன் தங்கு - தேன்பொருந்திய, அருக்கம் கண்ணியார் - எருக்கம்பூமாலையை யுடையவரும், அறிவு உடைமையார் - அறிவுடைமை பொருந்திய, மெய் யருக்கு-உண்மையடியவர்க்கு, அங்கு அண்ணியார்-அங்குச் சமீபித்துள்ளவருமாகிய இறைவரது, அகம்-; எ-று. (26)

புண்ணியமெய்ப் பண்ணவரும் பொன்னனையார் பூங்குழ
கண்ணிவா சஞ்செய் கலைசையே—எண்ணியொரு [லுங்
மன்னுக மத்தினுன் வாரிகடைந் தோர்க்கிரங்கு
மன்னுக மத்தினுன் வாழ்வு.

(இ-ள்.) புண்ணியம் மெய் பண்ணவரும் - புண்ணியத் தாற்கிடைத்த தேகத்தையுடைய தேவர்களும், கண்ணி- (வசித்தற்குரியவிடமென்று) கருதி, வாசம்செய் - வசிக்கும், கலைசை-, பொன் அனையார்-இலக்குமியையொத்த பெண்க ளின், பூங்குழலும் - பொலிவமைந்த கூந்தலும், கண்ணி- மாலை (யணிதலால்), வாசம்செய் - வாசனையையுண்டாக்கும், கலைசை-, எண்ணி (அமிருதம்பெற) நினைத்து, ஒரு-ஒப்பற்ற, மல் - வலிமையுள்ள, நாகம் மத்தினால் - (மந்தர) மலையாகிய மத்தினால், வாரிகடைந்தோர்க்கு-திருப்பாற்கடலைக்கடைந்த தேவாசுரர்கட்கு, இரங்கும்-(விஷம்பருகி) அருள்புரியும், மன்- நிலைபெற்ற, ஆகமத்தினுன் - ஆகமப்பொருளாக வுள்ளவரு மாகிய இறைவரது, வாழ்வு-; எ-று.

பொன் அனையார் பூங்குழலும், கண்ணி வாசஞ்செய் என்பதற்கு கள் (அணிந்தமலரில்) தேன், நிவாசஞ்செய்- பொருந்தியிருக்கும் என்றும் பொருள்கொள்ளலாம். (27)

சிந்துமதுப் பூங்காவிற் செவ்வீதி யிற்றும்பி
கந்திருவர் தேருர் கலைசையே—யுந்தி

கலசத்த னத்தியத்தன் காஞ்சனவெற் பீன்ற
கலசத்த னத்தியத்தன் காப்பு.

(இ-ள்.) மது சிந்தும் - தேன் சிந்தும், பூகாவில் - பூஞ்சோலையில், தும்பி - வண்டு, கந்தருவம் - கந்தருவமென்னும் பண்ணை, தேர்-ஆராய்ந்து, ஊர்-(பாடி) உலாவும், கலைசை-, செம்மைவீதியில்-செழுவியதெருக்களில், தும்பி-யானைகளும், கந்தருவம்-குதிரைகளும், தேர்-இரதங்களும், ஊர்-செல்லும், கலைசை-, உந்து-செலுத்தும், இகல் - வலிமையுடைய, அசத்தன் - ஆட்டுக்கடாவை வாகனமாகவுடைய முருகருக்கும், அத்தி-யானை(முகவிநாயகரு)க்கும், அத்தன்-பிதாவும், காஞ்சனம் வெற்பு-பொன் (மேரு) மலை, ஈன்ற-பெற்ற, கலசத்தனத்தி - கலசத்தையொத்த தனத்தையுடைய உமையவளுக்கு, அத்தன் - நாயகருமாகிய இறைவரது, காப்பு; எ-று.

ஒண்டொடியார் வாய்மொழியு முண்மைப் புகழுநவ
கண்டங் கடக்குங் கலைசையே—மண்டு
மருத்தருந்தும் பையரவர் வார்சடைமேல் வைத்த
மருத்தருந்தும் பையரவர் வாழ்வு.

(இ-ள்.) ஒண்தொடியார் - பிரகாசம் பொருந்திய வளையல்களணிந்த பெண்களின், வாய்மொழியும் – வாயினின்று வருஞ் சொற்களும், நவம்கண்டு-புதிய கற்கண்டை, அங்கு-உவமை கூறுமிடத்து, அடக்கும் - கீழ்ப்படுத்தும், கலைசை-, உண்மை புகழும்-நிலையுள்ள கீர்த்தியும், நவகண்டம்-ஒன்பது கண்டங்களையும், கடக்கும்-கடந்தப்பாற்செல்லும், கலைசை-, மண்டு-நெருங்கிய, மருத்து-காற்றை, அருந்தும் - சாப்பிடும், பைஅரவர் - படத்தையுடைய பாம்பையணிந்தவரும், வார்சடைமேல்-நீண்ட சடையின்மீது, வைத்த-தரித்த, மருதரும்-வாசனையைக்கொடுக்கும், தும்பையர் அவர் - தும்பைமாலையையுடையவருமாகிய வந்த இறைவரது, வாழ்வு-; எ-று.

தண்ணார் வயற்கரும்புந் தத்துவந்தே ரந்தணருங்
கண்ணாரஞ் சிந்துங் கலைசையே—விண்ணாடும்

ஐயரவா விட்டா ரகத்தார்நற் குண்டலங்கள்
ஐயரவா விட்டா ரகம்.

(இ-ள்.) தண்ஆர்வயல் கரும்பும் - குளிர்ச்சிபொருந்திய வயல்களிலுள்ள கரும்புகளும், கண்ஆரம்சிந்தும் - கணுக்களி னின்று முத்துக்களைச்சிந்தும், கலைசை-, தத்துவம்தேர் அந்தணரும்-உண்மைப்பொருளையாராயும் பிராமணர்களும், கண்-கண்களினின்றும், நாரம்சிந்தும்-நீரை (ஆனந்தபாஷ்பத்தை) சொரியும், கலைசை-, விண்ஆடும் - சிதாகாயத்தினிர்த்தனஞ் செய்யும், ஐயர்-கடவுளும், அவாவிட்டார் அகத்தார்-ஆசையை யொழித்த ஞானிகளி னுள்ளத்துள்ளவரும், நல்குண்டலங்கள்-சிறந்த காதணிகள், ஐஅரவாக - அழகிய பாம்பாக, இட்டார்-அணிந்துகொண்டவருமாகிய இறைவரது, அகம்-; எ-று.

நிட்டையுறு சிட்டருஞ்செய் நீலங் கடைசியருங்
கட்டங் கழிக்குங் கலைசையே—வட்டக்
குடிலச் சடையார் கொடியேனைப் பீறற்
குடிலச் சடையார் குடி.

(இ-ள்.) நிட்டைஉறு சிட்டரும்-யோகத்திலமர்ந்துள்ள பெரியவரும், கட்டம் - (தமது பிறவித்) துன்பத்தை, கழிக்கும்-நீக்கும், கலைசை-, கடைசியரும் - பள்ளப்பெண்களும், நீலம் - நீலோற்பலமலரை, செய்-வயல்களில், கட்டு-களைந்து, அங்குஅழிக்கும்-கரையிலவற்றையழிக்கும், கலைசை-, வட்டம் குடிலம்சடையார்-விருத்தாகாரமாய்வளைந்த சடையையுடையவரும், கொடியேனை - தீயனாகிய எனது, அச்சு-உயிரை, பீறல்குடில்-ஓட்டைக்கூடாகியசரீரத்தில், அடையார்-(இனி) அடைத்துவைக்காதவருமாகிய இறைவரது, குடி-; எ-று.

கொடியேனை-உருபு மயக்கம். (31)

கொஞ்சுகிளி யன்னார் குவிமுலையுங் கண்ணுவருங்
கஞ்சமுருக் கும்பூங் கலைசையே—வஞ்சமனக்
கைய ரவப்பணியார் கண்ணுமனத் துக்கரியார்
கைய ரவப்பணியார் காப்பு.

(இ-ள்.) கொஞ்சுகிளி அன்னார் - கொஞ்சுங்கிளிமொழி போலு மிசைவாய்ந்த பெண்களின், குவிமுலையும் - குவிந்த தனமும், கஞ்சம்-தாமரைமொக்கின்சீரை, முருக்கும்-கெடுக்கும், பூம்-பொலிவமைந்த, கலைசை-, கண்ணுவரும் - கம்மாளரும், கஞ்சம்-வெண்கலத்தை, உருக்கும்-, பூங்கலைசை-, வஞ்சம் மனம் கையர்-தீயமனத்தையுடைய வஞ்சகர்களாகிய, அவம் பணிஆர் - பயனற்ற தொழிலையுடையாரது, கண்ணு(க்கு)ம்-(ஊனக்) கண்ணிற்கும், மனத்துக்கும்-(தற்போதம் வாய்ந்த) மனத்திற்கும், அரியார்-(காண்டற்கு) அருமையானவரும், கைஅரவம்பணியார்-கையிற் சர்ப்பகங்கணத்தை யுடையவருமாகிய இறைவரது, காப்பு-, எ-று. (32)

சீலமுறு மன்னவருஞ் செங்கழுநீர்ப் போதலருங்
காலமளி யேறுங் கலைசையே—மாலில்
வருந்தப் படையார் மனத்தா ரினுநான்
வருந்தப் படையார் மனை.

(இ-ள்) சீலம்உறு மன்னவரும் - நல்லொழுக்கமுடைய அரசர்களும், கால்அமளி ஏறும் – கால்களையுடைய கட்டிலிலேறும், கலைசை-, செங்கழுநீர்போது - செங்கழுநீர்மொக்கு, அலரும்காலம் - மலருங்காலத்தில், அளிஏறும் - வண்டுகளேறிமொய்க்கும், கலைசை-, மாலில்வரும் - விபரீதத்தால் வரும், தப்பு அடையார் - குற்றத்தைச்சேராத பெரியவரது, மனத்தார் - மனத்து வசிப்பவரும், இன்னும்நான் வருந்தப் படையார்-மேலுநான் பிறவித்துன்பத்தால் வருத்தமடைய (எனக்குடம்பை) சிருட்டிக்காதவருமாகிய இறைவரது, மனை-, எ-று.

மன்னவரும் கால்அமளி ஏறும் என்பதற்கு அரசரும் காற்றைப்போல் வேகமாய்ச்செல்லும் குதிரைமேலேறும் என்றும் பொருள்கொள்ளலாம். (33)

நற்புலவர் செய்யுளுநன் னரியர்கள் வெண்ணகையுங்
கற்பனைய வென்னுங் கலைசையே—பொற்பார்

சலசத்தா னந்தனும்பர் சாரா தவசஞ்
சலசத்தா னந்தன் றலம்.

(இ-ள்.) நல்புலவர் செய்யுளும் - சிறந்த வித்துவான்களுடையபாடல்களும், கற்பனைய-பல கற்பனாலங்காரத்துடன் கூடியன, என்னும்-என்று (படித்தவர்) கூறும், கலைசை-, நல் நாரியர்கள் வெள்நகையும்-அழகிய பெண்களின் வெண்மையானபற்களும், கற்புஅனைய-முல்லைமலரை யொத்திருக்கின்றன, என்னும்-என்று (பிறர்) சொல்லும், கலைசை-, பொற்பு ஆர்-அழகு பொருந்திய, சலசத்தான் - தாமரையிலெழுந்தருளிய பிரமனும், நந்தன்-பாஞ்சசன்னியமேந்திய விஷ்ணுவும், உம்பர்-(மற்றைய) தேவர்களும், சாராத - அடையப்பெறாத, அசஞ்சல சத்துஆனந்தன்-பிறழாத சதானந்த ஸ்வரூபராக வுள்ளஇறைவரது, தலம்-, எ-று. (34)

அன்னநடை யார்மொழியு மாடவர்க டிண்டோளுங்
கன்னலம்போ லாருங் கலைசையே—சென்னியிடை
வாரம் படைத்தார் வளர்சிதம்ப ரேசருமை
வாரம் படைத்தார் மனை.

(இ-ள்.) அன்னநடையார் மொழியும் - அன்னத்தின் நடைபோலும் நடைவாய்ந்த பெண்களின் சொல்லும், கன்னல் அம்போல்-கருப்பஞ்சாற்றைப்போல், ஆரும்-(இனிமையாகப்) பொருந்தியிருக்கும், கலைசை-, ஆடவர்கள் திண்தோளும்-புருடர்களுடைய வலிய புயங்களும், கல்நலம்போல் ஆரும் - மலையின்றன்மையைப்போலுயர்ந்து பருத்திருக்கும், கலைசை-, சென்னிஇடை - சிரசில், வார் அம்புஅடைத்தார்-பிரவாக கங்கையைத் தரித்திருப்பவரும், வளர்சிதம்பர ஈசர்-(எல்லாவளனும்) வளர்ந்துள்ள சிதம்பரத்தி லெழுந்தருளிய ஈசரும், உமை-உமையம்மையிடத்து, வாரம்-அன்பை, படைத்தார்-உடைத்தானவருமாகிய இறைவரது, மனை-, (35)

தேந்தா மரைஞிமி றுந் திண்வயவர் தூணிகளுங்
காந்தாரம் பாடுங் கலைசையே—மாந்து

வருங்கடுக்கை யான்வாங்கி மாந்தினன்றேன் றேங்க
வருங்கடுக்கை யான்வாழ் மனை:

(இ-ள்.) தேன்தாமரைஞிமிறும்-தேன்பொதிந்ததாமரை மலரிலுள்ள வண்டுகளும், காந்தாரம்பாடும் - காந்தாரமென்னும் பண்ணைப்பாடும், கலைசை-, திண்வயவர் தூணிகளும்-வலிமைபொருந்திய வில்வீரரின் அம்புப்புட்டிலிலும், காந்தார் அம்பு ஆடும்-பகைவரின் அம்புகள் அசையும், கலைசை-, மாந்த-(பிரம்மாதிதேவர்களுயிரைக்)குடிக்க, வரும்கடு-(திருப்பாற்கடலில்தோன்றி)வந்தவிஷத்தை, கையால்வாங்கிமாந்தினன் - கையால்வாங்கி யுண்டவரும், தேன் தேன் கவரும் கடுக்கையான்-தேனை வண்டுகளுண்ணும்கொன்றைமலர்மாலை யணிந்தவருமாகிய இறைவர், வாழ்-வாழும், மனை-, எ-று.

பொங்குசுதை மாளிகையும் போர்வீரர் வேற்றசையுங்
கங்குலவித் துய்க்குங் கலைசையே—யெங்குநிறை
வையம் படைத்தான்கம் மாய்த்தாழித் தூணியிற்றன்
வையம் படைத்தான் மனை.

(இ-ள்.) பொங்குசுதை மாளிகையும் - விளங்குகின்ற சுண்ணச்சாந்துதீற்றிய வீடுகளும், கங்குல்அவித்து உய்க்கும்-இருட்டைக்கெடுத்து விளங்கும், கலைசை-, போர்வீரர் வேல் தசையும்-யுத்தவீரரின் வேலாயுதத்திற் பொருந்திய மாமிசத்தையும், கங்கு உலவி துய்க்கும்-பருந்துகள் (ஆகாயத்தில்) உலாவியுண்ணும், கலைசை-, எங்குநிறை - எவ்விடத்தும் நிறைந்துள்ள, வையம்படைத்தான் - பூமியைச் சிருட்டித்த பிரம்மதேவனுடைய, கம் மாய்த்து - தலையைக்கிள்ளி, ஆழி தூணியில் - பாற்கடலாகிய தனதம்புப்புட்டிலில், தன்வை அம்பு-தனது கூர்மைபொருந்திய அம்பாகிய விஷ்ணுவை, அடைத்தான்-சேர்த்தவராகிய இறைவரது, மனை-, எ-று. (37)

வேதியர்பொற் குண்டலமும் விண்ணுடுடையுவருங்
காதலமருஞ்சீர்க் கலைசையே—மாதனங்கள்

பந்தங் குலைக்குமம்மான் பாகத்தா னென்னிருண்ட
பந்தங் குலைக்குமம்மான் பற்று.

(இ-ள்.) வேதியர் பொன்குண்டலமும் - பிராமணர்கள் (காதிலணிந்த) பொற்குண்டலங்களும், காது அலமரும்-காதிற்சுழலும், சீர்-சீரையுடைய, கலைசை-, விண்ணூடு உடைய வரும்-தேவலோகத்தை யிருப்பிடமாகவுடைய தேவர்களும், காதல்அமரும்-(இந்நாட்டில் வசிக்க) ஆசைபொருந்தும், சீர்-சிறப்பினையுடைய, கலைசை-, பந்துஅங்குலைக்கும் - பந்தை யுவமை கூறுமிடத்ததன் சீரைக்கெடுக்கும், மாதனங்கள்-பெரிய முலைகளையுடைய, அமான் - அந்த உமையம்மையை, பாகத்தான் - இடதுபாகத்திலுடையவரும், என் இருண்ட பந்தம் குலைக்கும் அம்மான்-என் இருண்ட அஞ்ஞானக்கட்டைக் கெடுக்கும் சுவாமியுமாகிய இறைவரது, பற்று-, எ-று.

பொற்கொடியார் செங்கையினிற் பூம்பழனச் சேற்றளையிற்
கற்கடக மூருங் கலைசையே—சற்குருவாய்
வந்தவலம் பாற்றினார் வார்சடைமேல் விண்மேனி
வந்தவலம் பாற்றினார் வாழ்வு.

(இ-ள்.) பொன்கொடியார் செம்கையினில் - அழகிய பூங்கோடிபோன்ற இடையினையுடைய பெண்களின் செவந்தகையினில், கல்கடகம்ஊரும் - இரத்தினக்கற்கள் பதித்த கடகாபரணம்பொருந்தும், கலைசை-, பூபழனம்சேறு அளையில்-பொலிவமைந்த வயல்களிலுள்ள சேற்றின் வளைகளில், கற்கடகம் - ஞண்டுகள், ஊரும் - ஊர்ந்துசெல்லும், கலைசை-, சற்குருவாய்வந்து - ஞானசாரியரா யெழுந்தருளி, அவலம்பாற்றினார் - வீணான பிறவிநோயை நீக்கினவரும், வார்சடைமேல் - நீண்ட சடையின்மீது, விண்மேல்நிவந்த அலம்பு ஆற்றினார்-ஆகாயத்தின் மேலோங்கிய சப்திக்கின்ற (ஆகாய) கங்கையைச் சூடியவருமாகிய இறைவரது, வாழ்வு-, எ-று. (39)

நீர்மண் டிலஞ்சிகளு நீண்டதிருக் கோபுரமுங்
காரண்டந் தோயுங் கலைசையே—வீரார

பஞ்சான னத்தான் பதைபதைக்கத் தான்பிளந்த
பஞ்சான னத்தான் பதி.

(இ-ள்.) நீர்மண்டு இலஞ்சிகளும் - நீர்நிறைந்த வாவிகளிலும், காரண்டந்தோயும் - நீர்க்காக்கைகள் ஸ்நானஞ்செய்யும், கலைசை-, நீண்ட திரு கோபுரமும்-, கார்அண்டம் தோயும்- மேகமண்டலத்தைச்சேரும், கலைசை-, வீரம் - வீரம்பொருந்திய, நரபஞ்சானனத்தான்-நரசிங்கவடிவமான விஷ்ணு, பதைபதைக்க - துடிதுடிக்க, பிளந்த - (எட்டு கால்களுடன்கூடிய சரபபக்ஷியாகவந்து அவரை) இருகூறாக்கிய, பஞ்சஆனனத்தான்-(ஈசானம், தற்புருடம், வாமனம், அகோரம், சத்தியோஜாதம் என்னும்) ஐந்து திருமுகங்களையுடைய இறைவரது, பதி-, எ-று. தான்-அசை. (40)

பொற்பூர் மடந்தையரும் போதகமன் னார்மார்புங்
கற்பூர நாறுங் கலைசையே—விற்போற்
கரும்புருவ மானார்தங் காமுறார் நெஞ்சிற்
கரும்புருவ மானார்தங் காப்பு.

(இ-ள்.) பொற்புஊர் மடந்தையரும் - அழகுபொருந்திய பெண்களும், கற்புஊரநாறும் - கற்புப்பொருந்த விளங்கும், கலைசை-, போதகம்அன்னார் மார்பும்-யானைக்கன்றையொத்த புருடர்களின் மார்பும், கற்பூரநாறும்-பச்சைக்கற்பூரம்சேர்ந்த கலவைச்சாந்து மணக்கும், கலைசை-, வில்போல் - வில்லைப்போலுமுள்ள, கரும்புருவமானார்தம்-கரிய புருவத்தையுடைய பெண்களின், காமம்உறார் - ஆசைபொருந்தாத ஞானிகளின், நெஞ்சில்-, கரும்புஉருவம் ஆனார்தம் - கரும்பைபோலினிக்குமாணந்தஸ்வரூபரான இறைவரது, காப்பு-, எ-று. (41)

மல்லுழவ ரேரிகட்டும் வாளுழவர் வரம்பரிக்கும்
கல்லணைகள் வைக்குங் கலைசையே—முல்லைநல்லார்
மத்தி னடிக்குமெய்யன் மால்விடையாக் கொண்டவனீ
மத்தி னடிக்குமெய்யன் வாழ்வு.

(இ-ள்.) மல்உழவர்-வலிவுள்ள பள்ளர்கள், ஏரிகட்கும்-ஏரிகளுக்கும், கல்அணைகள் வைக்கும்-கற்களினால் வரம்புகட்டும், கலைசை-, வாள்உழவர்-வாள்வித்தையில் வல்ல வீரர்கள், வாம்பரிக்கும் - தாவிச்செல்லும் குதிரைகளுக்கும், கல்லணைகள்வைக்கும்-ஜீனிகளை (முதுகின்மேல்) வைக்கும், கலைசை-, முல்லைநல்லார் - முல்லையரும்பைப்போலும் பற்களையுடைய (முல்லைநிலத்துவசிக்கும்) இடைப்பெண்கள், மத்தின்-மத்தினால், அடிக்கும் மெய்யன்-அடிக்கும் தேகத்தையுடைய விஷ்ணுவை, மால்விடையாகக்கொண்டவன் - பெருமைவாய்ந்த ரிடபவாகனமாகக்கொண்டவரும், ஈமத்தில் நடிக்கும் மெய்யன் - சுடுகாட்டில் நர்த்தனஞ்செய்யுங் கடவுளுமாகிய இறைவரது, வாழ்வு-, எ-று. மெய்யன்-சத்தியசொரூபி. (42)

நம்புமடி யார்வினையு நல்லரசர் வீதிகளுங்
கம்பமா வோடுங் கலைசையே—சம்புவெள்ளிப்
பொற்பினா கத்தான் புகழ்சிதம்ப ரேசனொரு
பொற்பினா கத்தான் புரம்.

(இ-ள்.) நம்பும் அடியார்வினையும் - விரும்புகின்ற மெய்யடியாரி னிருவினைகளும், கம்பம் ஆக-அச்சமுண்டாக, ஓடும்-ஒழியும், கலைசை-, நல்அரசர் வீதிகளும்-சிறந்த ராஜவீதிகளும், கம்பம்மா - கம்பத்திற்கட்டிய யானைகள், ஓடும்-, கலைசை-, சம்பு-இன்பவடிவரும், பொற்பின் வெள்ளிநாகத்தான்-அழகிய வெள்ளிமலை (கயிலை)யி லிருப்பவரும், புகழ்சிதம்பர ஈசன் - (அன்பர்) துதிக்கின்ற சிதம்பரத்தெழுந்தருளிய ஈசரும், ஒரு பொன்பினாகத்தான் - ஒப்பற்ற பொன் (மேரு) வில்லையுடையவருமாகிய இறைவரது, புரம்-, எ-று. (43)

மாதரம்பொற் கொப்புகளும் வாயர்ர் மதகுகளுங்
காதலையப் போடுங் கலைசையே—கோதில்
பரதத்து வந்தானென் பார்க்கருளி யென்றும்
பரதத்து வந்தான் பதி.

(இ-ள்.) மாதர் அம்பொன் கொப்புகளும் - பெண்கள் அழகிய பொன்னாற்செய்த கொப்பென்னு மாபரணத்தையும், காதுஅலையபோடும் - காதிலசையும்படித்தரிக்கும், கலைசை-, வாய்ஆர் மதகுகளும் - துவாரமுள்ள மதகுகளிலும், காது - (கரையை) அழிக்கும், அலைஅப்புஓடும் - அலையுடைய நீரோடும், கலைசை-, கோதுஇல் - குற்றமில்லாத, பாதத்துவம்- மேலான உண்மைப்பொருள், தான் என்பார்க்கு - சிவனே யென்னு முண்மை யடியவருக்கு, அருளி - (மோக்ஷத்தைக்) கொடுத்து, என்றும்-எப்போதும், பாதத்துஉவந்தான் - பரத நாடகத்தில் விருப்புற்ற இறைவாது, பதி-, எ-று. (44)

பட்டங்கொள் வேந்தர் பவனியின்மின் னூருரையிற்
கட்டியங்கூ றுஞ்சீர்க் கலைசையே—சிட்டருளத்
தன்பா னதியானத் தானந்த மாம்பெருமை
யன்பா னதியா னகம்.

(இ-ள்.) பட்டங்கொள் வேந்தர் பவனியில் - பட்டாபிஷேகஞ் செய்யப்பெற்ற அரசரின் உலாவில், கட்டியம்கூறும்- (வந்தியர்) கட்டியஞ்சொல்லும், சீர்க்கலைசை-, மின்னூர்உரையில் - மின்னலையொத்த இடையினையுடைய பெண்களின் சொற்களில், கட்டி-கற்கண்டினையொத்த இனிமை, அங்கு ஊறும்-ஆங்கதிகரிக்கும், சீர்க்கலைசை-, சிட்டர்உளத்து-பெரியோர்கள் மனதில், அன்பானதியானத்து - அன்பாகாமான சம்ாதிகூடுமிடத்து, ஆனந்தம் ஆம் பெருமையன் - ஆனந்தரூபமாகவிளங்கு மேம்பாட்டையுடையவரும், பால்நதியான்- பாலாற்றங்கரையிலுள்ள க்ஷேத்திரங்களிலெழுந்தருளியிருப்பவருமாய இறைவாது, அகம்-, எ-று.

மூன்ருமடியை அன்யான தியானத்தான் அந்தமாம் பெருமையன்பால் நதியான் எனப்பிரித்து அன்புநிரம்பிய தியானத்திற் கட்டுப்பட்டவனும், அழகாகிய பெருமையுடையவனும், பால்போலும் வெள்ளிய நுரைகளையுடைய கங்காநதியைச் சிரசின்கட் டரித்தவனும் என்றும் பொருள்கொள்ளலாம். கட்டியம்-அரசரின் புகழ்நிரம்பியபா. (45)

மாசில் வணிகரும்பூ வார்குழலின் மாதரும்பொற்
காசறையுட் கொட்டுங் கலைசையே—வீசுகையின்
மாசுணங்காப் பிட்டவரன் வண்ணத் திருவுருவின்
மாசுணங்காப் பிட்டவரன் வாழ்வு.

(இ-ள்.) மாசுஇல் வணிகரும் - (அதருமவழியாற் பொருளீட்டும்) குற்றமில்லாத வைசியர்களும், பொன்காசு-பொன்னுணயங்களை, அறையுள்-(சேமிக்கும்) கோட்டத்துள், கொட்டும்-சொரியும், கலைசை-, மாதரும் - பெண்களும், பூவார்குழலில் - புட்பமணிந்த நீண்ட கூந்தலில், பொன் - அழகிய, காசறை-மயிர்ச்சாந்தை, உள்கொட்டும்-அப்பும், கலைசை-, வீசுகையில் - வீசியாடும் கையினிடத்து, மாசுணம் காப்பு - சர்ப்ப கங்கணத்தை, இட்ட - தரித்த, அரன் - (அடியவர் மனவிருளைக்) கெடுப்பவரும், மாசுண்ணம்காப்பு - மாட்சிமையுடைய பொடியாம் விபூதிக்காப்பை, வண்ணம் திருஉருவின்-(தமது) அழகிய திருமேனியில், இட்ட-தரித்த, வான் - சிரேட்டருமாகிய இறைவரது, வாழ்வு-, எ-று. (46)

மன்னரணி மாளிகையு மாறாக் கொடையினருங்
கன்னன் மணி யேயுங் கலைசையே—வன்னிமதி
என்பரவ மட்டா ரெருக்கணிவார் காமியா
என்பரவ மட்டா ரிடம்.

(இ-ள்.) மன்னர்அணி மாளிகையும் - அரசருடைய் அழகிய உப்பரிகைகளிலும், கன்னல்மணி - நாழிகையுணர்த்துங் கண்டாமணி, எயும் - பொருந்தியிருக்கும், கலைசை-, மாறாத கொடையினரும் - (தம்மினின்றும்) நீங்காத வள்ளன்மையுடைய (ஆங்குள்ள) கொடையாளரும், கன்னன்மணி எயும்-கன்னனையும் சிந்தாமணியையும் ஒக்கும், கலைசை-, வன்னி-வன்னிமலரையும், மதி-சந்திரனையும், என்பு-முழுவென்பையும், அரவம்-பாம்பையும், மட்டு-தேனுள்ள, ஆர்-ஆத்திமாலையையும், எருக்கு-எருக்கம்பூமாலையையும், அணிவார் - தரிப்பவரும், கா என்பர் - எம்மை இரக்ஷியென்று கூறும் அடிய

வரின், - அவம்-தீங்கை, அட்டார் - அழித்தவருமாய இறைவரது, இடம்-, எ-று.

கன்னன்-குந்திபுத்திரன்; பாண்டவர்கட்கு மூத்தோன். சிந்தாமணி-கருதியதைக் கொடுக்குமொரு தெய்வமணி; அது அமராவதிக்கணுள்ளது. மியா அசைநிலை. (47)

மைவாழ் மதிற்கிடங்கு மள்ளர் பெருங்குழுவுங்
கைவேழ மாடுங் கலைசையே—வைவாய்ந்த
கட்டங்கங் கையுடையார் காமருசீர்ச் செஞ்சடைமேற்
கட்டங்கங் கையுடையார் காப்பு.

(இ-ள்.) மைவாழ்-மேகம் சஞ்சரிக்கும், மதில் - மதிலைச் சூழ்ந்துள்ள, கிடங்கும் - அகழியிலும், கைவேழம் - துதிக்கையையுடைய யானைகள், ஆடும்-நீராடும், கலைசை-, மள்ளர் பெருங்குழுவும் - பள்ளர்களின் பெருங்கூட்டத்திலும், கை-(அவரவர்) கையில், வேழம் - கரும்பு, ஆடும் - அசையும், கலைசை-, வைவாய்ந்த-வைரம்பொருந்திய, கட்டங்கம்-யோகதண்டத்தை, கைஉடையார்-திருக்கையிலுடையவரும், காமருசீர்-அழகுவாய்ந்த சிறப்புற்ற, செம்சடைமேல்-செவந்தசடையின்மீது, கட்டு-அணிந்த, அம் - நீரையுடைய, கங்கைஉடையார்-கங்கையாற்றை யுடையவருமாகிய இறைவரது, காப்பு-,

கட்டங்கம் என்பதற்கு மழுவெனப் பொருள்கொள்ளின் வைவாய்ந்த என்பதற்குக் கொழுந்துகள் பொருந்தியவென்றும், கத்தியெனப் பொருள்கொள்ளின் கூர்மைவாய்ந்தவென்றும் பொருள்கொள்க. (48)

பொன்னிலகு பூந்தடமும் பொற்பினட மங்கையருங்
கன்னியரங் காடுங் கலைசையே—மன்னு
மலைவிலத்த ரன்பாய் மலைவிலத்த ரென்றும்
மலைவிலத்தர் வாழு மனை.

(இ-ள்.) பொன்இலகு-அழகுவிளங்கும், பூதடமும்-மலர்நிறைந்த தடாகத்திலும், கன்னியர்-பெண்கள், அங்கு-நீரா

டுந்துறையில், ஆடும்-நீராடும், கலைசை-, பொற்பின்நட மங்கையரும்-அழகிய நாட்டியப்பெண்களும், கன்னி - அழியாத, அரங்கு-நாடகசபையில், ஆடும்-நர்த்தனஞ்செய்யும், கலைசை-, மன்னும் - நிலைபெற்ற, மலை - மேருமலையாகிய, வில் - வில்லையுடைய, அத்தர்-கையையுடையவரும், அன்பாய் - அன்பாக, மலை-(அன்பர்கள்) சாத்தும், விலத்தர்-வில்வத்தையுடையவரும், என்றும்-எப்போதும், மலைவுஇல் - அழிதலில்லாத, அத்தர்-தலைவருமாகிய இறைவரது, மனை-, எ-று.

மன்னும்......மனையென்பதற்கு மன்னும் - நிலைபெற்ற, அலைவுஇல்-கெடுதலில்லாத, அத்தர்-செந்நிறம்வாய்ந்தவரும், அன்பாய் மலைவில்அத்தர்-அன்பாக மேருமலையை வில்லாகவுடைய கையையுடையவரும், என்றும்-எப்போதும், மலைவு-(தனக்கு) ஒப்பு, இல்-(பிறர்) இல்லாத, அத்தர் - தலைவருமாகிய இறைவரது, மனை-, என்றும் பொருள்கொள்ளலாம். (49)

சுந்தரஞ்சேர் நந்தினமுந் தோகை மயிலுமின்னார்
கந்தரங்கண் டார்க்குங் கலைசையே—கொந்திதழிக்
கண்ணி யரிப்பார் கலங்குமுயிர்க் கஞ்ஞானக்
கண்ணி யரிப்பார்தங் காப்பு.

(இ-ள்) சுந்தரம்சேர்-அழகுபொருந்திய, நந்துஇனமும்-சங்குக்கூட்டங்களும், மின்னார் - மின்னலையொத்த இடையினையுடைய பெண்களது, கந்தரம்கண்டு - கழுத்தைப் பார்த்து, ஆர்க்கும்-(நீரெமக்கொப்பாகமாட்டீரென் றிகழ்ச்சி செய்வதுபோல்) சப்திக்கும், கலைசை-, தோகைமயிலும்-கலாபத்தையுடைய மயில்களும், மின் ஆர் - மின்னல்பொருந்திய, கந்தரம் - மேகத்தை, கண்டு-, ஆர்க்கும் - சந்தோஷிக்கும், கலைசை-,கொந்து-கொத்தாகிய, இதழிகண்ணியர்-கொன்றைமாலையையணிந்தவரும், இபார்-இப்பூமியின்கண், கலங்கும்-(பிறவித்துன்பத்தால்) வருந்தும், உயிர்க்கு-ஜீவர்கட்கு, அஞ்ஞானம் - அஞ்ஞானமாகிய, கண்ணி - வலையை, அரிப்பார்-கெடுப்பவருமாகிய இறைவரது, காப்பு-, எ-று. (50)

செய்யதவத் தோருந் திரிமருப்புப் போர்த்தகருங்
கையடையா ருஞ்சீர்க் கலைசையே—வெய்யவிடத்
துத்திப்பாம் பாட்டினார் சொன்மூவர் தோத்திரஞ்செய்
தித்திப்பாம் பாட்டினார் சேர்வு.

(இ-ள்.) செய்ய தவத்தோரும் - நல்ல தவத்தையுடைய பெரியவர்களும், கையடை - அடைக்கலத்தானமாக, ஆரும்-பொருந்தும், சீர் - சிறப்பினையுடைய, கலைசை-, திரிமருப்பு-திருகிய கொம்பினையுடைய, போர்தகரும்-சண்டைசெய்யும் ஆட்டுக்கடாக்களும், கை-(மேய்ப்பவன்) கையிலுள்ள, அடை-இலைகளை, ஆரும் - உண்ணும், சீர் - சிறப்பினையுமுடைய, கலைசை-, வெய்யவிடம்-கொடிய விஷத்தையுடைய, துத்தி-படப்பொறியையுடைய, பாம்பு - சர்ப்பங்களை, ஆட்டினார்-(சித்தாகத்தோன்றி) ஆட்டினவரும், சொல்-(யாவருந்) துதி செய்யும், மூவர் - சம்பந்தர், நாவுக்கரையர், சுந்தரரென்னு மூவரும், தோத்திரஞ்செய் - துதிசெய்த, தித்திப்புஆகும்-இனிப்பாகும், பாட்டினார் - பாட்டின்மேலாசையுள்ளவருமாகிய இறைவரது, சேர்வு-சேருமிடம், எ-று. (51)

சிற்பரணி யாடரங்குந் திண்புரிசைக் கேதனமுங்
கற்பமுற வாக்குங் கலைசையே—பற்பலவென்
றோற்றந் துரத்தினார் தோன்றிக் கிடந்திமைக்கும்
பாற்றந் துரத்தினார் பற்று.

(இ-ள்.) சிற்பர்-சிற்பிகள், அணி-அழகிய, ஆடு அரங்கும்-நடனசாலைகளையும், கல்பம் உற-இரத்தினங்கள் பொருந்தும்படி, ஆக்கும் - செய்யும், கலைசை-, திண்புரிசை - வலிமையுள்ள மதில்களிலுள்ள, கேதனமும் - கொடிகளும், கற்பம்-கற்பகவிருக்ஷத்தை, உறவுஆக்கும்-நட்புச்செய்யும், கலைசை-, என்-எனது, பல்பலதோற்றம் - பலப்பலவாகிய பிறவிகளை, துரத்தினார் - நீக்கினவரும், தோன்றி - விளங்கி, கிடந்து-புரண்டு, இமைக்கும் - பிரகாசிக்கும், பால்தந்து - பாலைப்போன்ற வெண்ணிறம்வாய்ந்த பூணூலை, உரத்தினார்-மார்பிலுடையவருமாகிய இறைவரது, பற்று-, எ-று. (52)

இது முச்சிலேடை.

மாப்பொலிந்த வீகையரு மைந்தருநன் மாதவருங்
காப்பணியாக் கொள்ளும் கலைசையே—தீப்பிறங்கு
மாலாழி யீந்தான்முன் மாலினுக்குப் பாலனுக்குப்
பாலாழி யீந்தான் பதி.

(இ-ள்.) மாபொலிந்த-மாட்சிமைவிளங்கிய, ஈகையரும்-கொடையாளிகளும், கா-கற்பகச்சோலையை, பணியாகக்கொள்ளும்-ஏவலாகக்கொள்ளும், கலைசை-, மைந்தரும் - சிறுவரும், காப்பு அணியாகக்கொள்ளும் - காப்பைக் கைக்காபரணமாகக் கொள்ளும், கலைசை-, நல்மாதவரும்-சிறந்த பெரிய தவத்தை யுடையவரும், கா-(பிறரை) இரக்ஷித்தலை, பணியாகக்கொள்ளும்-தொழிலாகக்கொள்ளும், கலைசை-, தீபிறங்கும்-அழலாய் விளங்கும், மால்ஆழி-பெரியசுதரிசனமென்னுஞ் சக்கரத்தை, முன் - முன்னம், மாலினுக்கு - விஷ்ணுவிற்கு, ஈந்தான்-கொடுத்தவரும், பாலனுக்கு - (வியாக்கிரபாத முனிவரது பிள்ளை (உபமன்னிய முனிவரு)க்கு, பால்ஆழி - பாற்கடலை ஈந்தான்-கொடுத்தவருமாகிய இறைவரது, பதி-, எ-று.

அசுரரைக் கொல்லும்வண்ணம் திருமால் சிவபெருமானை நோக்கித் தவங்கிடந்து தன் கண்மலரொன்றை யாயிரமலரிற்குறைந்த ஒரு மலருக்காகப் பிடுங்கி யணிந்தவரருள்பெற்றுச் சக்கரம்பெற்றாரென்பதும், வியாக்கிரபாத முனிவருடைய பாலராகிய உபமன்னியமுனிவர் குழந்தைப் பருவத்திற் பசியுடனழுதலைச் செவிசாய்த்த சிவபெருமானவர்க்குப் பாற்கடலைக் குடிக்கத்தந்தார் என்பதும் புராண வரலாறுகள். இவற்றையே "பாலுக்குப்பாலகன் வேண்டியழுதிடப் பாற்கடலீந்தபிரான், மாலுக்குச் சக்கர மன்றருள் செய்தவன்" என்று திருவிசைப்பா கூறுகிறது. (53)

தந்திடையார் தோய்தடமுந் தாவுமிள வாளைகளுங்
கந்தித் தலைசேர் கலைசையே—வந்திரும்

பிட்டுக் கலந்தார் பிராட்டிகழுத் திற்றொடையல்
இட்டுக் கலந்தா ரிடம்.

(இ-ள்.) தந்து - தூலொத்த, இடையார் - இடையை யுடைய பெண்கள், தோய்தடமும் - நீராடுந் தடாகங்களும், கந்தித்து-பரிமளித்து, அலைசேர் - அலையோடு பொருந்தும், கலைசை-, தாவும் இளவாளைகளும்-மேலே தாவுகின்ற இளைய வாளைமீன்களும், கந்தி-கமுகமரத்தினது, தலைசேர்-உச்சியிற் பொருந்தும், கலைசை-, வந்திதரும் - வந்தியென்பவள் தந்த; பிட்டுக்கு-, அலந்தார்-சுழன்றவரும், பிராட்டிகழுத்தில்-தடாதகைப்பிராட்டியாரது கழுத்தில், தொடையல் இட்டு - மாலையைத் தரித்து, கலந்தார் - சேர்ந்தவருமாகிய இறைவரது இடம்-, எ-று.

தான் ஈந்தபொன்னைப் பெறுமாறு அரிமர்த்தனபாண்டியன் வாதவூரரை வைகைச் சுடுமணலிலிட்டுத் தண்டிக்கும்போது சிவபெருமான் கங்கையைப் பெருக்கிவிட அது வைகையிற் பெருக்குடன்வர வதனைக் கரைசோலும்படி யொவ்வொருகுடிக்கு மவ்வரையன்கட்டளையிட யெல்லோருமங்ஙனஞ்செய்யப் பிட்டுவாணிச்சியாகிய வந்தியென்பாள் மாத்திரம் தனிக்கிழவியாயிருப்பதாற் கூலியாள் வேண்டியிரங்கச் சிவபெருமானே கூலியாளாய்வந்து பிட்டிற்காக மண்ணுந்திச் சொரிந்தார் என்பதும் பாண்டிநாட்டில் மலைவத்துவஜபாண்டியனுக்குக் குமாரியாயவதரித்த தடாதகைப் பிராட்டியாரென்னுந் திருநாமத்தையுடைய உமையம்மையை மாலையிட்டு மணந்தார் என்பதுந் திருவிளையாடற் புராண வரலாறுகள். (54)

இது முச்சிலேடை.

அங்கனையார் கையி லணிமதிலிற் றேன்பணையிற்
கங்கணமண் டுஞ்சீர்க் கலைசையே—பொங்கும்
இருபதத்த னையுவரைக் கீழிருத்தி யின்பந்
தருபதத்த னையன் றலம்.

(இ-ள்.) அங்கனையார்-பெண்களது, கையில்-கைகளில், கங்கணம்-காப்புகள், மண்டும்-பொருந்தும், கலைசை-, அணி மதிலில்-அழகிய மதில்களில், கம்கணம்-மேகக்கூட்டங்கள், மண்டும்-நெருங்கும், கலைசை-, பணையில்-வயல்களில், தேன்-தேனனது, கங்கு-வரம்பினை, அண்ண-பொருந்த, மண்டும்-மிகுந்திருக்கும், சீர் - சிறப்பினையுடைய, கலைசை-, பொங்கும்-வலிமிகுந்த, இருபது அத்தன்-இருபது கைகளையுடைய இராவணன், நைய - வருந்த, வரைகீழ் - கயிலைமலையின்கீழ், இருத்தி-(விரலுனியாலழுத்திப்) பொருத்தி, இன்பம் தரு பதத்தன் ஐயன் - (பின்னவனுக்கு) இன்பத்தைக்கொடுக்குந் திருவடியுடையவராகிய இறைவரது, தலம்-, எ-று.

பண்டிராவணன் திக்குவிஜயஞ் செய்தபோது நந்தி மொழியை நன்மொழியெனக்கொள்ளாது கயிலையைத் தூக்குங்காலத் ததிர்ச்சியுண்டாக வதனாற்பயந்த வுமையம்மையார் பெருமானைக் கட்டிக்கொள்ள அவர் தமது கால்விரலினன் மலையையழுத்தினர். அதனாலம்மலைக் கீழிருந்தவிராவணனும் நசுங்கி வருந்திப் பின் சாமவேத கீதம்பாடி யருள்பெற்றான் என்பது புராண வரலாறு. (55)

சூழுமிளங் காவுஞ் சுரிகுழலார் சிற்றிடையுங்
காழகமுற் றேர்கொள் கலைசையே—தாழும்
பவத்துயரப் போக்கினர் பாலுறா தென்னைச்
சிவத்துயரப் போக்கினர் சேர்வு.

(இ-ள்.) சூழும்-(வண்டுகள்) சூழ்ந்துள்ள, இளம்காவும்-இளஞ்சோலைகளும், காழகம்உற்று - வைரம்பொருந்தி, ஏர் கொள் - அழகுகொள்ளும், கலைசை-, சுரிகுழலார் - சுருண்ட கூந்தலையுடைய பெண்களின், சிறு இடையும் - நுண்ணிய இடைகளும், காழகம் - வஸ்திரத்தை, உற்று-பொருந்தி, ஏர் கொள்-அழகுகொள்ளும், கலைசை-, தாழும்-தாழ்ந்த, பவத்து-பிறவியில், உயர-மேன்மேலும் பொருந்தும்படி, போக்கினர் பால்-(தீவழியிற்) செலுத்தும் புல்லறிவாளரிடத்து, உறாது-

சேராது, என்னை-, சிவத்து-சிவஸ்வரூபத்தில், உயரயோக்கி னூர்-மேம்படும்படிச்செய்த விறைவாது, சேர்வு-, எ-று. (56)

தேசிலகு மாவணமுஞ் செம்மைநடு வோர்மொழியுங்
காசினியா யஞ்சேர் கலைசையே—மூசியெனை
யொட்டுஞ் சடைவிரித்தா ரோங்கிவரு நீர்புகுதக்
கட்டுஞ் சடைவிரித்தார் காப்பு.

(இ-ள்.) தேசு இலகு-பிரகாசம்பொருந்திய, ஆவணமும்-கடைவீதிகளிலும், காசினி-பூமியிலுள்ள, ஆயம் - பெண்கள் கூட்டம், சேர் - சேரும், கலைசை-, செம்மை - செவ்விதாகிய, நடுவோர்மொழியும் - நடுவுநிலைமையுள்ள பெரியோர்களது சொற்களும், காசுஇல்-குற்றமில்லாத, நியாயம்சேர்-நியாயம் பொருந்தும், கலைசை-, மூசி - நெருங்கி, எனை-, ஒட்டும்-பொருந்தியுள்ள, சடைவு-துன்பத்தை, இரித்தார்-கெடுத்தவரும், ஓங்கிவரும் - பாந்துயர்ந்துவரும், நீர் - கங்கையானது, புகுத-வந்து தங்குமாறு, கட்டும் - கட்டிய, சடைவிரித்தார்-சடையினை விரித்தவருமாகிய இறைவாது, காப்பு-, எ-று.

பூண்டாங்கு காளையரும் பொற்கோயின் மங்கையருங்
காண்டீப மேந்துங் கலைசையே—யாண்டிரவி
பற்றகர மாட்டினூர் பன்னகத்தைத் தாமரைபோ
லுற்றகர மாட்டினூ ரூர்.

(இ-ள்.) பூண் தாங்கு - ஆபாணத்தைத் தரித்திருக்கும், காளையரும்-ஆடவரும், காண்டீபம் - வில்லை, ஏந்தும் - பிடித்திருக்கும், கலைசை-, பொன்கோயில் - அழகிய கோயிலில், மங்கையரும் - பெண்களும், காண்தீபம் - காணப்படுங் குடவிளக்கை, எந்தும்-ஏந்தியிருக்கும், கலைசை-, ஆண்டு - அத்தக்கன் யாகத்தில், இரவி-(கர்வங்கொண்ட) சூரியனின், பல் தகர - பல்லுதிரும்படி, மாட்டினூர் - அடித்தவரும், பன்னகத்தை - பாம்பை, தாமரைபோல்உற்ற - தாமரை மலரைப் போற் பொருந்திய, காம்-கையினல், ஆட்டினூர்-ஆட்டினவருமாகிய இறைவாது, ஊர்-, எ-று. (58)

ஞானமுடை யோருலகை நற்சிறுமி மார்குழலைக்
கானலெனக் காணுங் கலைசையே—மானமருஞ்
செங்கம லக்கரத்தார் தீரா தென்னையழுத்தும்
பங்கம லக்கரத்தார் பற்று.

(இ-ள்.) ஞானம் உடையோர் - சிவஞானமுடைய பெரியோர், உலகை-பூமியை, கானல்என காணும்-பேய்த்தேரென்றறியும், கலைசை-, நல்சிறுமிமார்-அழகிய யௌவனப்பெண்களது, குழலை-கூந்தலை, கானல்என - காடுபோல (கருத்தடர்ந்துநீண்டதென்று), காணும் (ஆண்டுள்ளவர்) பார்க்கும், கலைசை-, மான் அமரும்-மான் ஏந்திய, செங்கமலகரத்தார்-செந்தாமரைமலர்போன்ற கையினையுடையவரும், தீராது-(என்றும் விட்டு) நீங்காது, என்னை அழுத்தும் - (பிறவிக்கடலில்) என்னையமிழ்விக்கும், பங்கம்-குற்றமாகிய, மலக்கு-மலமாகிய விரும்பைக் கெடுத்தற்கு, அரத்தார்-அரத்தை யொத்தவருமாகிய இறைவரது, பற்று-, எ-று.

இஃதேகதேச வுருவகவணி. மலத்திற்கு என்பது மலக்கெனச் செய்யுள் விகாரத்தால் வந்தது. (59)

இது முச்சிலேடை.

வாரியளிப் போர்கரமு மாதருங்கோங் கும்பூவிற்
காரிகைக்கொப் பென்னுங் கலைசையே-யாரியனைக்
கல்லா லடியுற்றார் கான்போ யருச்சுனன்கை
வில்லா லடியுற்றார் வீடு.

(இ-ள்.) வாரி - (திரவியத்தை யளவின்றி) எடுத்து, அளிப்போர்-(இரப்போர்க்குக்) கொடுக்குந் தருமவான்களது, கரமும்-கையும், பூவில்-பூமியில், காரி-காரியென்னும் வள்ளலுடைய, கைக்கு-கையிற்கு, ஒப்பு என்னும்-ஒப்பென்று (கற்றூர்) சொல்லும், கலைசை-, மாதரும்-பெண்களும், பூவில் காரிகைக்கு - செந்தாமரைமலரிலிருக்குமிலக்குமிக்கு, ஒப்பு என்னும்-, கலைசை-, கோங்கு இன் பூஉம்-கோங்குமரத்தின் பூக்களும், காரிகைகொப்பு என்னும் - அழகினையுடைய கொப்

பென்னு மாபரணத்திற்கு ஒப்பென்றுகூறும், கலைசை-, ஆரியனுய்-ஞானசாரியனுய், கல்ஆல்அடி - கல்லாலவிருக்ஷத்தின் கீழ், உற்ருர்-பொருந்தியவரும், கான்போய்-காட்டில் (வேடனுய்ச்)சென்று, அருச்சுனன்-(பாசுபதாஸ்திரம்பெறத் தவஞ் செய்யும்) அர்ச்சுனனது, கைவில்லால்-கையிலேயுள்ள காண்டீபமென்னும் வில்லினுல், அடிஉற்ருர்-அடியைப் பெற்றவருமாகிய இறைவரது, வீடு-, எ-று.

கோங்கிற்பூவும் காரிகைக்கென்பதற்கு கோங்குமாத்தின்பூக்களும் பொன்னுக்கு என்றும் பொருள்கொள்ளலாம். உருபு பிரித்துக் கூட்டப்பட்டது. (60)

செல்லோதி யார்காற் சிலம்புமவர் தோய்தடமுங்
கல்லோல் மாருக் கலைசையே—பொல்லேன்
அரந்தைக்கோ டீரத்தா னருள்வைத் தாண்ட
கரந்தைக்கோ டீரத்தான் காப்பு.

(இ-ள்.) செல் - மேகத்தையொத்த, ஓதியார் - கூந்தலையுடைய பெண்களின், கால்சிலம்பும் - கால்களிலணிந்த சதங்கைகளும், கல்-(அதனுள்வைத்த) பருக்கைக்கற்களின், ஓலம்-சப்தம், மாரு - நீங்காத, கலைசை-, அவர்தோய் - அப்பெண்கள் நீராடும், தடமும்-தடாகங்களும், கல்லோலம்-அலைகளை, மாரு-நீங்காத, கலைசை-, பொல்லேன்-கொடியேனது, அரந்தை - துன்பமாகிய, கோள்-குற்றம், தீர - நீங்க, அருள் வைத்து-கிருபைவைத்து, ஆண்ட - ஆட்கொண்ட, கரந்தை-சிவகரந்தைப்பூவைச் சூடிய, கோடீரத்தான்-சடையையுடைய இறைவரது, காப்பு-, எ-று. தான்-அசை. (61)

பூண்டகழற் காளையரும் பூந்தடத்திற் பூவையருங்
காண்டமுகந் தேறுங் கலைசையே—நீண்டசடைக்
கிந்துவளை விற்ரு ரெடுத்தணிந்தார் கூடவிலே
வந்துவளை விற்ருர் மனை.

(இ-ள்.) கழல்பூண்ட-வீரகண்டையணிந்த, காளையரும்-(கால்களையுடைய) ஆடவரும், காண்டம் உகந்து ஏறும்-குதி

கரையின்மீது விரும்பியேறும், கலைசை-, பூதடத்தில் - தாமரைத் தடாகங்களில், பூவைய்ரும் - பெண்களும், கர்ண்டம்-நீரை, முகந்து - மொண்டுகொண்டு, ஏறும் - (கரையில்) ஏறிவரும், கலைசை-, நீண்ட சடைக்கு - நீண்ட சடாபாரத்தில், இந்து - சந்திரனும், வளை-வளைந்த, வில் - ஒளியுடைய, தார் எடுத்து அணிந்தார் - மாலையையெடுத்துச் சூடியவரும், கூடலில் - மதுரையில், வந்து-(வளையல்விற்குஞ் செட்டியாக) வந்து, வளைவிற்றூர் - வளையலை விற்றவருமாகிய இறைவரது, மனை-, எ-று.

சடைக்கு உருபு மயக்கம். (62)

சிட்டமுறு யோகியருஞ் செய்யுளல வன்பெடையுங்
கட்டளையி னாடுங் கலைசையே—யெட்டுருவாய்த்
தோய்ந்த வருக்கொளியார் சுற்றைம் பொறிவழிவிட்
டோய்ந்த வருக்கொளியா ரூர்.

(இ-ள்:) சிட்டம்உறு யோகியரும்-பெருமைபொருந்திய யோகியரும், கட்டளையில் - (சாஸ்திர)விதிப்படி, நாடும்-ஒழுகும், கலைசை-, செய்உள்-வயல்களுள், அலவன்-ஆணண்டும், பெடையும் - பெண்ணண்டும், கட்டுஅளையின் - வரம்பிலுள்ள வளைகளில், நாடும் - செல்லும், கலைசை-, எட்டு உருவாய் - (மண், புனல், தேயு, வாயு, விண், சூரியன், சந்திரன், ஆத்மா என்னும்) அஷ்டமூர்த்தமாய், தோய்ந்த-பொருந்திய, அருக்கு ஒளியார் - சூரியனைப்போற் பிரகாசமுடையவரும், சுற்று - சுழல்கின்ற, ஐம்பொறிவழிவிட்டு-ஐம்புலன்கள் செல்லுமார்க்கத்தினின்றும் விலகி, ஓய்ந்தவருக்கு-சாந்தமடைந்துள்ள பெரியோர்கட்கு, ஒளியார் - (தம் வடிவத்தை) மறைக்காதவருமாய விறைவரது, ஊர்-, எ-று. (63)

தேற்றூச் சிறுரினமுந் தேம்பொழிலு மல்குசிறு
காற்றேர் கடாவுங் கலைசையே—போற்றியன்போ
டேகுவல யத்தா ரிறைஞ்சும் படப்பாந்தள்
வாகுவல யத்தார் மனை.

(இ-ள்.) தேறுஆ-தேறுதலில்லாத, சிறார் இனமும்-சிறு பிள்ளைகளின் கூட்டமும், சிறுகால்தேர் - சிறிய உருளையை யுடைய இரதத்தினை, கடாவும்-செலுத்தும், கலைசை-, தேம் மல்குபொழிலும்-தேன்பொருந்திய சோலைகளும், சிறுகாற்று-தென்றற்காற்றினால், ஏர்கள்-அழகுகள், தாவும்-பொருந்தும், கலைசை-, குவலயத்தார்-பூமியிலுள்ளோர், அன்போடு - அன்புடன், போற்றி-துதித்து, இறைஞ்சும்-வணங்கும், படபாந்தள்-படத்தையுடைய சர்ப்பங்களை, வாகுவலயத்தார்-வாகுவலயமாகவுடைய இறைவரது, மனை-, எ-று.

ஏ-அசைநிலைகள். வாகுவலயம்-தோளணி. (64)

ஆயச் சிறார்படமு மார்க்குங் கடாசலமுங்
காயத் திரியுங் கலைசையே—நேயமுடன்
பைத்த பதஞ்சலியார் பார்த்துருகப் பொற்பொதுவில்
வைத்த பதஞ்சலியார் வாழ்வு.

(இ-ள்.) ஆயம் சிறார் - கூட்டமாகிய சிறுவர்களின், படமும்-காற்றாடியும், காயத்து-ஆகாயத்தில், இரியும் - பறக்கும், கலைசை-, ஆர்க்கும்-சப்திக்கும், கடம் அசலமும் - மதத்தைப் பொழியும் மலை (யானை)களும், காய திரியும்-(பகைவரைக்) கொல்லத்திரியும், கலைசை-, நேயமுடன்-அன்புடன், பைத்த-படத்தையுடைய, பதஞ்சலியார்-பதஞ்சலிமுனிவர், பார்த்து உருக - கண்டு மனமுருகும்படி, பொன்பொதுவில் - பொன்னம்பலத்தில், வைத்தபதம் - ஊன்றிய திருவடியால், சலியார்-வெறுப்படையாதவராகிய இறைவரது, வாழ்வு-, எ-று.

ஒன்றுமற்றோ ரான்முலையு முண்மைநெறி கண்டோருங்
கன்றுமறந் தீர்க்குங் கலைசையே—கொன்றைமுடிக்
கங்கா தரனார் கடையேன் கவியுவக்கும்
அங்கா தரனா ரகம்.

(இ-ள்.) கன்று ஒன்றும்-ஒரு கன்றுக்குட்டியும், மற்று ஓர் ஆன்முலை-வேறொரு பசுவின் மடியை, மறந்து ஈர்க்கும்-மறந்து இழுக்கும், கலைசை-, உண்மைநெறிகண்டோரும்-

உண்மையான ஞானமார்க்கத்தையறிந்தவரும், கன்று-வருத்தும், மறம் - பாபத்தை, தீர்க்கும் - கெடுக்கும், கலைசை-, கொன்றைமுடி-கொன்றைமாலையணிந்த சிரசின்கண், கங்காதரனார்-கங்கையைத் தரித்தவரும், கடையேன்-கீழ்ப்பட்டவனாகிய வென்னுடைய, கவிஉவக்கும் - பாட்டினைவிரும்பும், அம்காது அரனார்-அழகிய காதினையுடையவருமாகிய இறைவரது, அகம்-, எ-று. (66)

வாளரவ வல்குனல்லார் வாள்விழியு மாலயமுங்
காளமியம் புஞ்சீர்க் கலைசையே—நீள்வீணைக்
கஞ்சக் கரத்தான் கடும்பிறவி வேரறுக்கும்
அஞ்சக் கரத்தா னகம்.

(இ-ள்.) வாள்அரவம் - ஒளிபொருந்திய சர்ப்பத்தின் படம்போன்ற, அல்குல்நல்லார்-நிதம்பத்தினையுடைய பெண்களின், வாள்விழியும்-வாளையொத்த கண்ணும், காளம்-விஷமானது, இயம்பும் - (தம்மிடத்துண்டென்று) சொல்லும், கலைசை-, ஆலயமும் - கோயில்களிலும், காளம் - எக்காளம், இயங்கும்-சப்திக்கும், கலைசை-, நீள்வீணை-நீண்ட வீணையை, கஞ்சம் கரத்தான் - தாமரைமலர்போன்ற கையிலுடையவரும், கடும்பிறவி-கொடிய பிறவியின், வேர் அறுக்கும்-மூலத்தைக்களையும், அஞ்சு அக்கரத்தான் - பஞ்சாக்கரஸ்வரூபருமாகிய இறைவரது, அகம்-, எ-று. (67)

உத்தமர்தேர் நூனெறியு மொள்ளொளிசேர் நித்திலமுங்
கத்தங் கொழிக்குங் கலைசையே—தத்தருவி
யுற்றவரை யாள்வா ருறுதன்ங்க டோய்வரவா
வற்றவரை யாள்வா ரகம்.

(இ-ள்.) உத்தமர்-மேலோர், தேர் - ஆராயும், நூல்நெறியும்-சாஸ்திரவழிகளும், அங்கு - அவ்விடத்துள்ளவருடைய, கத்து-பொய்யை, ஒழிக்கும்-போக்கும், கலைசை-, ஒள் ஒளிசேர்-மிக்க பிரகாசம்பொருந்திய, நித்திலமும் - முத்தையும், கத்தம் - அலைகள், கொழிக்கும் - (கரையில்) ஒதுக்கும்,

கலைசை-, தத்து அருவி - தாவுகின்ற நீரருவிகள், உற்ற-பொருந்திய, வரையாள் - இமமலையிற் பிறந்த வுமையம்மையாரின், வார் உறு-கச்சிற்பொருந்திய, தனங்கள்-முலைகளை, தோய்வார்-கலந்தவரும், அவா அற்றவரை-ஆசைநீங்கியவரை, ஆள்வார் - அடிமைகொள்பவருமாகிய இறைவரது, அகம்-, எ-று. (68)

பல்வகைநூ லாய்ந்தவரும் பார்த்திவர்சூட் டும்முடியுங்
கல்விரவி யேயுங் கலைசையே—வல்வினையா
லிட்ட தளையுடையா ரெண்ணத்தி னுக்கரியார்
பட்ட தளையுடையார் பற்று.

(இ-ள்.) பல்வகைநூல் ஆய்ந்தவரும்-பலவகையான நூற்களை யாராய்ந்தவர்களும், கல்வி ரவி ஏயும்-கல்வியினாற் சூரியனுக்கொப்பாகும், கலைசை-, பார்த்திவர்-அரசர்கள், சூட்டும்-தரிக்கும், முடியும்-கிரீடங்களும், கல்-இரத்தினங்கள், விரவி-பொருந்தி, ஏயும் - விளங்கும், கலைசை-, வல்வினையால்-கொடிய வினையினால், இட்ட தளை உடையார் - பொருந்திய விலங்கினையுடையவரது, எண்ணத்தினுக்கு - கருத்துக்கு, அரியார் - (அறிதற்கு) அருமையானவரும், அதளை - (புலித்) தோலை, பட்டு உடையார்-பட்டாடையாக வுடையவருமாகிய இறைவரது, பற்று-, எ-று. (69)

நற்றரள நீர்ச்செறுவு நாவலர்கண் முத்தமிழுங்
கற்றையவை யேறுங் கலைசையே—குற்றமில்சீ
ராவினஞ் சாடினா ரன்பிறக்கன் வேள்விபுக்க
தேவினஞ் சாடினார் சேர்வு.

(இ-ள்.) நல்தாளம் - சிறந்த முத்துக்களையுடைய, நீர் செறுவும்-நீர்தங்கிய கழனிகளும், கற்றைய வை - கூட்டமாய வைக்கோலால், ஏறும்-உயரும், கலைசை-, நாவலர்கள்-வித்துவான்கள், முத்தமிழும் - இயலிசைநாடகமென்னு மூன்று தமிழையும், கற்று-படித்து, ஐ-அழகுவாய்ந்த, அவை-(கற்றவரின்) சபையில், ஏறும்-செல்லும், கலைசை-, குற்றம் இல்சீர்-

குற்றமில்லாத சிறப்பினையுடைய, ஆவின்-பசுவின், அஞ்சு-(நெய், பால், தயிர், கோமயம், கோசலம் என்னும்) பஞ்ச கவ்வியங்களில், ஆடினார்-அபிடேகமாடுபவரும், அன்பு:இல்-அன்பில்லாத, தக்கன் வேள்விபுக்க - தக்கனது யாகத்திற் சென்ற, தே இனம்-கடவுட் கூட்டங்களை, சாடினார்-(வீரபத்திர வுருக்கொண்டு) அடித்தவருமாய இறைவரது, சேர்வு-,. எ-று.

தேவர்களெல்லோரும் தக்கன் யாகத்திற்சென்று சிவ பெருமானையிகழ்ந் தவிர்ப்பாகம் பெறவிருக்குங்காலத்துச் சிவ பெருமான் றனதக்கினிக்கண்ணினின்றும் வீரபத்திரவடி வங்கொண்டுசென் றத்தேவர்கள்கந்தையை யடக்கினார் என் பது புராண வரலாறு. (70)

செவ்வைமனத் தன்பினருந் தென்மடுவிற் செங்கயலுங்
கவ்வையலைத் துள்ளுங் கலைசையே—கொவ்வைவாய்த்
துப்பிதழி வாமத்தார் சுற்றுசடி லத்தினறை
பப்பிதழி வாமத்தார் பற்று.

(இ-ள்.) செவ்வைமனத்து - பரிசுத்தமான மனதில், அன்பினரும்-அன்புடைய வடியார்களும், கவ்வை அலைத்து-துன்பத்தைக் கெடுத்து, உள்ளும் - சிவத்யானஞ்செய்யும், கலைசை-, தென்மடுவில்-அழகிய மடுவில், செம்கயலும்-வளவிய கயற்கெண்டைகளும், கவ்வை-சப்திக்கும், அலை-அலையினிடத்து, துள்ளும்-தாவிப்பாயும், கலைசை-, கொவ்வைவாய்-கொவ்வைக்கனியைப்போன்ற வாயினையும், துப்பு இதழி-பவளத்தையொத்த விதழினையுமுடைய உமையை, வாமத்தார்-இடதுபாகத்திலுடையவரும், சுற்றுசடிலத்தில்-வளைந்த சடையில், நறைபப்பு - தேன்றதும்பும், இதழி - கொன்றை மலரையணிந்த, வாமத்தார் - அழகினை யுடையவருமாய இறைவரது, பற்று-, எ-று.

பப்பு என்பது பம்பு என்பதன் விகாரம். (71)

சீற்றமுறு வாட்கையருஞ் செங்குமுதத் தேனரியுங்
காத்திரவில் வாங்குங் கலைசையே—நாத்திகபி

னீதிக்கருத்தினர் நெஞ்சுகந்தார் கற்கரிக்கன்
ஞேதிக் கருத்தின ரூர்.

(இ-ள்) சீற்றம்உறு - கோபமுடைய, வாள்கையரும்-வாளேந்திய கையையுடைய வீரர்களும், காத்திரம்வில்-பெரிய வில்லை, வாங்கும்-வளைக்கும், கலைசை-, செம்குமுதம் - செவ்வாம்பல்மலர்களிலுள்ள, தேன்-தேனை, அரியும்-வண்டுகளும், இரவில்காத்து-இராப்போதிற்காத்திருந்து, வாங்கும்-(காலைப் போதில்) கிரஹிக்கும், கலைசை-, நாத்திகம் இல்-பொய்யில்லாத, நீதிகருத்தினர் - நீதியினையுடைய மனத்தையுடைய பெரியோரது, நெஞ்சு-மனதை, உகந்தார்-(தாமெழுந்தருளியிருக்க யோக்கியஸ்தானமென) விரும்புகிறவரும், கல்கரிக்கு-கல்யானைக்கு, அன்று - அக்காலத்தில், ஓது-புகழும், இக்கு-கரும்பை, அருத்தினர்-உண்ணக்கொடுத்தவருமாய இறைவரது, ஊர்-, எ-று.

மதுரைமாநகரத்தில் அபிஷேகபாண்டியன் காலத்துச் சிவபெருமான் எல்லாம் வல்லசித்தராகவந்து விளையாடிய போது அப்பாண்டியன் அவர்பால்வந்து தானொருழவனிடம் பெற்ற கரும்பைக்கொடுத்து இதையிக்கல்யானைக்குக் கொடுத்துண்ணச்செய்யும் பார்ப்போமென வவாதனையக் கல்யானையேற்றுக் கறிக்கச்செய்தனர் என்பது புராண வரலாறு. (72)

தேம்பா விசையினருஞ் செய்நீல மாளிகையுங்
காம்போதி யோதுங் கலைசையே—கூம்பா
மருப்பச் சிலையான் மகிழ்ந்திடினு மேற்கும்
பொருப்பச் சிலையான் புரம்.

(இ-ள்.) தேம்பா (வும்) இசையினரும்-இனிமைபொருந்திய கீதத்தைப் பாடுபவரும், காம்போதி-காம்போதியென்னுமிராகத்தை, ஓதும்-பாடும், கலைசை-, நீலம்செய் - நீலமணிகளாற் செய்த, மாளிகையும்-உப்பரிகைகளும், காம்பு-மூங்கிலையுடைய, ஓதி-மலைக்கு, ஓதும்-(ஒப்பென்று) கூறும், கலைசை-, கூம்பாத - வாடாத, மரு - வாசனையுடைய, பச்சிலை - பச்சி

லையை, யான்-, மகிழ்ந்து-விரும்பி, இடினும் - இட்டுப் பூசித்தாலும், ஏற்கும்-அங்கீகரிக்கும், பொருப்பு-மேருமலையாகிய, அ சிலையான்-அந்த வில்லையேந்திய இறைவரது, புரம்-, எ-று.

வஞ்சியிளம் பேதையரு மாறா திராப்பகலுங்
கஞ்சனையைப் பார்க்குங் கலைசையே—நெஞ்சு
முருக வழுத்துவா ரும்பரின்பத் தேனைப்
பருக வழுத்துவார் பற்று.

(இ-ள்.) வஞ்சி - வஞ்சிக்கொடிபோன்ற இடையினையுடைய, இளமைபேதையரும் - பன்னிரண்டாண்டு நிரம்பப்பெறாத பெண்களும், கஞ்சனையை-கண்ணாடியை, பார்க்கும்-, கலைசை-, இராப்பகலும் - இரவும் பகலும், கஞ்சன் - பிரமதேவன், மாறாது-தவறாமல், ஐயை-கடவுளை, பார்க்கும்-தரிசிக்கும், கலைசை-, நெஞ்சம் உருக-மனங்கசிய, வழுத்துவார்-துதிக்குமடியவரை, உம்பர்-மேலான, இன்பத்தேனை-பரமானந்தத்தேனை, பருக - குடிக்க, அழுத்துவார் - (அதனில்) அமிழ்த்துபவராகிய இறைவரது, பற்று-, எ-று. (74)

வண்டோடை யம்புயமு மாவீர ரம்புயமுங்
கண்டூதி யாருங் கலைசையே—பண்டோர்கோ
லங்கூ விளத்தா னழற்பிழம்பாய் நீண்டெழுந்த
பைங்கூ விளத்தான் பதி.

(இ-ள்.) வண்டு-வண்டுகள், ஓடை-நீரோடைகளிலுள்ள, அம்புயமும் - தாமரைமலரையும், கண்டு - பார்த்து, ஊதி-ரீங்காரஞ்செய்து, ஆரும் - (அம்மலருள்) தங்கும், கலைசை-, மாவீரர் - பெருமையமைந்த போர்வீரர்களின், அம்-அழகிய, புயமும்-தோள்களும், கண்டூதி-தினவு, ஆரும்-பொருந்தியிருக்கும், கலைசை-, பண்டு-முன்னர், ஓர்-ஒரு, கோலம் - பன்றி (விஷ்ணு), கூ-பூமியை, விள்ள-பிளக்க, தான் அழற்பிழம்பாய் நீண்டு-தான் (அப்போது) அக்கினித்தம்பமாக மேலு

யர்ந்து, எழுந்த-ஓங்கிய, பைங்கூவிளத்தான்-பசிய வில்வத்தைத் தரித்திருப்பவராகிய இறைவரது, பதி-, எ-று.

விள்-விள்ளவென்பதன் விகாரம். (75)

தண்டாச் சீவுரியர்க டாக்குமடி யாருமுறு
கண்டீர வங்கூர் கலைசையே—திண்டே
ரருக்கரைக்கண் டொட்டா ரறிவிலா நெஞ்சத்
தருக்கரைக்கண் டொட்டார் தலம்.

(இ-ள்.) தண்டா - (வலிமையுந் தைரியமும்) நீங்காத, சவுரியர்கள்-வீரர்களின், தாக்கும்-மோதுதலும், கண்டீரவம்-சிங்கத்தின் (மோதுதற்போன்று,) கூர் - மிகுந்திருக்கும், கலைசை-, அடியாரும்-, உறுகண்-துன்பத்தை, தீர-தவிர்க்கும்படி, அங்கு ஊர்-அங்கு வசிக்கும், கலைசை-, திண் - வலிய, தேர்-(ஒற்றையுருளார்ந்த) தேரையுடைய, அருக்கர் - சூரியரது, ஐகண்-அழகிய கண்ணை, தொட்டார் - தோண்டினவரும், அறிவுஇல்லா - ஞானமில்லாத, நெஞ்சம் - மனதையுடைய, தருக்கரை - கெர்வமுடையவரை, கண்டு-பார்த்து, ஒட்டார்-(அவரிடம்) சேராதவருமாகிய இறைவரது, தலம்-, எ—று. (76)

புட்குலமு மாதரைவேள் போல்வாரு மாலையினிற்
கட்சிவந்து கூடுங் கலைசையே—வெட்சிமல
ரந்தார்க் குமரனு ரையரர வென்றிமையோர்
வந்தார்க் குமரனுர் வாழ்வு.

(இ-ள்.) புள்குலமும்-பறவையினங்களும், மாலையினில்-சாயுங்காலத்தில், கட்சிவந்து-கூட்டில்வந்து, கூடும்-சேரும்-கலைசை-, வேள்போல்வாரும் - மன்மதனையொத்த அழகினையுடைய ஆடவரும், மாலையினில் - காமமயக்கங்கொண்ட காலத்து, கண்சிவந்து-கண்கள் சிவக்கும்படி, கூடும்-(தம் பத்தினிகளுடன்) புணரும், கலைசை-, வெட்சிமலர் - வெட்சிமலராற்றொடுத்த, அம்தார்-அழகிய மாலையையணிந்துள்ள, குமரனுர் - சுப்பிரமணியரது, ஐயர் - தந்தையாரும், இமையோர்

வந்து - தேவர்கள் சேர்ந்து, அர என்று ஆர்க்கும் - ஹரஹர வென்று சப்திக்கும், அரன் - அடைந்தாரது பாவத்தைத் தவிர்ப்பவருமாய இறைவரது, வாழ்வு-, எ-று. (77)

வீட்டினெறி தேராரும் வேதியர்வேள் வித்தழலுங்
காட்டத் தெரியுங் கலைசையே—கூட்டரண
நீறு வசித்தார்நன் னேசமிலே னெஞ்சினிற்றே
னூறு வசித்தா ருறை.

(இ-ள்) வீட்டின் நெறிதேராரும் - முத்திமார்க்கத்தை யறியாதவரும், காட்ட - (பெரியோர்கள்) காண்பிக்க, தெரியும் (அதனை) தெரிந்துகொள்ளும், கலைசை-, வேதியர் வேள்வி தழலும் - பிராமணர்களின் யாகாக்கினியும், காட்டத்து-சமித்தினால், எரியும்-, கலைசை-, கூட்டு அரணம் - ஒருங்கு சேர்ந்த (மூன்று) கோட்டைகளையும், நீறுக-சாம்பராக, அசித்தார் - (அசட்டையாக) நகைத்தவரும், நல்நேசம் இலேன் நெஞ்சினில் - சிறந்தவன்பு இல்லாதவனாகிய என்னுடைய மனதில், தேன்ஊறு - தேனூற்றுப்போல, வசித்தார்- (இனிமையாக) வாசஞ்செய்பவருமாகிய இறைவரது, உறை-இடம்-, எ-று. (78)

கோமளமின் னார்முலைக்குங் கோலவத னத்தினுக்குங்
காமர் மதிவீழ் கலைசையே—நாமமரையா
மத்தி னடிப்பார் மதியைக் கலைகெடக்கோ
பத்தி னடிப்பார் பதி.

(இ-ள்.) கோமளம் மின்னார்-அழகுவாய்ந்த பெண்களின், முலைக்கும்-, காமர்-மன்மதனது, மதி-புத்தி, வீழ்-விரும்பும், கலைசை-, கோலம்-அழகிய, வதனத்தினுக்கும்-முகத்திற்கும், காமர்மதி-அழகிய சந்திரன், வீழ்-கீழ்ப்படும், கலைசை-, நாமம் அரையாமத்தில் - அச்சத்தைத்தரும் நடுவிரவில், நடிப்பார்-நர்த்தனஞ்செய்பவரும், மதியை - சந்திரனை, கலைகெட-

சந்திரிகை குறைய, கோபத்தின் - கோபத்தால், அடிப்பார்-அடிப்பவருமாகிய இறைவரது, பதி-, எ-று.

நாம் - நாமமென்பதன் விகாரம். (79)

வார்முலையார் நன்னுதற்கும் வாவிவிடா யுற்றவர்க்குங்
கார்முகந்துண் ணென்னுங் கலைசையே—நார்மிகுந்த
வுள்ளத் திருப்பினா ருள்ளேன்றன் கன்மனத்தை
மெள்ளத் திருப்பினார் வீடு.

(இ-ள்.) வார்முலையார் - கச்சணிந்த தனத்தினையுடைய பெண்களின், நல்நுதற்கும் - அழகிய நெற்றிக்கும், கார்முகம்-வில்லானது, துண் என்னும்-(யாமொப்பாகோமென்று) அச்சமடையும், கலைசை-, வாவி-குளங்கள், விடாய்உற்றவர்க்கும்-தாகவிடாய் கொண்டவர்க்கும், கார்-நீரை, முகந்துஉண் என்னும்-நீவீர் மொண்டுபெருகுங்கள்என்றுசொல்லுதலை நிகர்க்கும், கலைசை-, நார்மிகுந்த-அன்புமிகுந்த, உள்ளத்து இருப்பினார்-(அடியார்களின்) உள்ளக்கமலத்தில் எழுந்தருளியிருப்பவரும், உள்ளேன்தன் கல்மனத்தை - (தம்மை) நினையாத என்னுடைய கல்லைப்போலும் வன்மை வாய்ந்த மனத்தினை, மெள்ள-மெதுவாக, திருப்பினார்-திருப்பினவருமாகிய இறைவரது, வீடு-, எ-று. (80)

நூலஞ்சு நுண்ணிடையார் நோக்கமுமம் போருகமுங்
காலஞ்ச மின்னுங் கலைசையே—கோலமுடி
வைத்தகம லத்தார் வருங்கூற்றை யஞ்ஞான்று
தைத்தகம லத்தார் தலம்.

(இ-ள்.) நூல் அஞ்சும்-நூலும் (கண்டு) அஞ்சத்தக்க, நுண்இடையார் - நுட்பமாகிய இடையினையுடைய பெண்களின், நோக்கமும்-பார்வையும், கால்-இயமனும், அஞ்ச-பயமடைய, மின்னும்-மின்னுப்போல் விளங்கும், கலைசை-, அம்போருகமும்- தாமரைகளிலும், கால்-(அழகிய) காலையுடைய, அம்சம் - அன்னப்பறவைகள், மின்னும்-விளங்கும், கலைசை-, கோலம்முடி-அழகிய திருமுடியில், வைத்த-தரித்த, கமலத்தார்- நீரை (கங்கையை) உடையவரும், வரும்கூற்றை- (மார்க்

கண்டனைக் கொல்லும்பொருட்டுவந்த) இயமனை, அஞ்ஞான்று- (பாசம் வீசிய) அப்போது, உதைத்த-, கமலத்தார்- திருவடித்தாமரையினையுடையவருமாய இறைவரது, தலம்-, எ-று. (81)

மைம்மா றுசிந்தையரு மாறா விதாணருங்
கைம்மாறு கொள்ளாக் கலைசையே-வெம்மான்றோல்
வீக்கு மரையன் விளிபடவென் சஞ்சிதத்தைப்
போக்கு மரையன் புரம்.

(இ-ள்.) மைம்மாறு சிந்தையரும் - குற்றம்நீங்கிய மனத்தையுடையவரும், கைம்மாறுகொள்ளா - பிரதியுபகாரத்தைப்பெறாத, கலைசை-, மாறாத விதாணரும்- கோடாத புத்திமான்களும், கை - ஒழுக்கத்தில், மாறு கொள்ளாத - மாறுபாடு அடையாத, கலைசை-, வெம்மான் தோல்-(கண்டவர்) விருப்பமுறும் மான்றோலை, வீக்கும் - கட்டும், அரையன் - இடையை யுடையவரும், விளிபட - இறக்க, என் சஞ்சிதத்தை-எனது பழவினையை, போக்கும் - தவிர்க்கும், அரையன்-தலைவருமாகிய இறைவரது, புரம்-, எ-று.

பட்டாரு மிட்டிடையார் பார்வையிலுங் கோதையிலுங்
கட்டா ரிவருங் கலைசையே—யெட்டான
ஆசை யுடுக்கையா ரண்டங் கிடுகிடுக்கும்
ஓசை யுடுக்கையா ரூர்.

(இ-ள்.) பட்டுஆரும் - பட்டாடைபொருந்திய, இட்டு இடையார்-இடுகிய இடையையுடைய பெண்களின், பார்வையிலும் - நோக்கத்திலும், கட்டாரி - வாள் (செய்யுந் துன்பம் போற்றுன்பம்), வரும் - சேரும், கலைசை-, கோதையிலும்- கூந்தலிலும், கள்தார்-தேனொழுகுமாலைகள், இவரும்-பொருந்தியிருக்கும், கலைசை-, எட்டான-எட்டாயுள்ள, ஆசை உடுக்கையார்-திக்கை ஆடையாகவுடைய (திகம்பரரென்னும் பெயரையுடைய) வரும், அண்டம்-அண்டங்கள், கிடுகிடுக்கும்-நடுங்

கும், ஓசை-சப்தத்தினையுடைய, உடுக்கையார் - டமாகத்தை யுடையவருமாகிய இறைவரது, ஊர்-, எ-று. (83)

அத்தார் மகவினத்தை யாட்டின் குழவைநன்கு
கைத்தாய ரேந்துங் கலைசையே—கொத்தாருஞ்
சீத வடம்புடையார் தேவி சிவகாமி
மாத வடம்புடையார் வாழ்வு.

(இ-ள்.) அதார் - அந்த மாலையை (தரித்த), மகவு இனத்தை - குழந்தைக் கூட்டங்களை, கைதாயர் - செவிலித் தாய்கள், ஏந்தும்-கையிற்றாங்கும், கலைசை-, ஆட்டின்குழவை- ஆட்டுக்குட்டிகளை, ஆயர் - இடையர்கள், நன்கு உகைத்து-நன் றாக மேய்த்து, ஏந்தும் - (பிறகு) கையிலேந்திக்கொள்ளும், கலைசை-, கொத்துஆரும்-பூங்கொத்துகள் பொருந்திய, சீத- குளிர்ச்சிவாய்ந்த, அடம்பு உடையார் - அடப்பந்தளிரைத் தரித்துள்ளவரும், சிவகாமிதேவி-சிவகாமிதேவியாரென்னுந் திருநாமத்தினையுடைய, மாதவள் - பிராட்டியாரை, தம்புடை யார்-தமது இடதுபாகத் துடையவருமாகிய இறைவரது, வாழ்வு-, எ-று. (84)

மாதர் விழிவேலும் வண்ணப் பசுங்கிளியுங்
காதை யுரைக்குங் கலைசையே—யோதிடும்பேய்
மண்டுபுறங் காட்டினார் வாணனறக் கண்ணனமர்
கண்டுபுறங் காட்டினார் காப்பு.

(இ-ள்.) மாதர்விழி வேலும்-பெண்களின் கண்களாகிய வேலும், காதை-கொல்லுந்தொழிலை, உரைக்கும்-(கண்டார்க் குக் குறிப்பாக) அறிவிக்கும், கலைசை-, வண்ணம் - அழகிய, பசுங்கிளியும் - பச்சைக்கிளிகளும், காதை-(பிறர்கூறுங்) கதை களை, உரைக்கும் - (கேட்டப்பின்) சொல்லும், கலைசை-, ஓதி டும்-சொல்லும், பேய்மண்டு புறங்காட்டினார்-பேய்கள் நிறைந் துள்ள சுடுகாட்டிலுள்ளவரும், வாணன் அற - வாணாசுரன் மாள, கண்ணன்-கிருஷ்ணனுடன், அமர்கண்டு-போர்செய்து,

புறங்காட்டினார் - முதுகுகாட்டியோடிய திருவிளையாடலைச் செய்தவருமாகிய இறைவரது, காப்பு-, எ-று. (85)

அஞ்சநடை யார்மொழியி லைபிளைஞர் மெய்யிலுருக்
கஞ்சுகஞ்சே ரின்பக் கலைசையே—யஞ்சக்
கிளத்தலை யோட்டினார் கேதமற நாயே
னுளத்தலை யோட்டினா ரூர்.

(இ-ள்.) அஞ்சம் நடையார்-அன்னத்தி னடைபோன்ற நடைவாய்ந்த பெண்களின், மொழியில் - சொல்லில், உருக்கம் - மனவுருக்கமும், சுகம்-சுகமும், சேர் - சேர்ந்திருக்கும், இன்பம்-இன்பத்தைத்தரும், கலைசை-, ஐ இளைஞர்-அழகிய சிறுவர்களின், மெய்யில்-தேகத்தில், உரு - அழகிய, கஞ்சுகம்-சட்டைகள், சேர் - பொருந்தியிருக்கும், இன்பக்கலைசை-, அஞ்ச-(பிரமன்) பயப்படும்படி, கிள் அதலை ஒட்டினார்-கிள்ளிய அந்தத்தலையோட்டினை யுடையவரும், கேதம் அற - குற்றம் நீங்க, நாயேன் உளத்து - அடியேன் மனதுள், அலை - (வருத்தும்) துன்பத்தை, ஓட்டினார் - போக்கினவருமாகிய இறைவரது, ஊர்-, எ-று. (86)

வாணுதலார் பூணுமவர் மையலுறப் பட்டோருங்
காணத் தணியுங் கலைசையே—யேணிவளர்
கையா னடத்தினான் கங்காளன் சங்கரன்வெண்
மையா னடத்தினான் வாழ்வு.

(இ-ள்.) வாள் நுதலார் - ஒளிபொருந்திய நெற்றியை யுடைய பெண்களின், பூணும்-ஆபரணமும், காணத்து-பொன்னினால் செய்யப்பட்டு, அணியும் - அலங்கரிக்கப்பட்டிருக்கும் கலைசை-, அவர் - அப்பெண்களின்மேல், மையல் உறப்பட்டோரும் - காமமயக்கங்கொண்டோரும், காண -(அப்பெண்களிவர்களைக்காமப்பார்வையாற்) பார்க்க, தணியும்-(கொண்ட காமம்) அடங்கும், கலைசை-, ஏணிவளர்கையான் - மான் பொருந்திய கையையுடையவரும், நடத்தினான் - நிருத்தஞ்

செய்பவரும், கங்காளன்-முழுவெண்பைத் தரித்தவரும், சங்கரன் - சங்கரனென்னும் பெயருடையவரும், வெண்மை ஆன் - வெள்ளியரிஷபத்தை, நடத்தினன்-ஊர்ந்தவருமாகிய இறைவரது, வாழ்வு-, எ-று.

சங்கரன் காரணப்பெயர்; சம்-இன்பத்தை,கரன்-கொடுப்பவன். (87)

மாணிலைமை வாய்மையரும் வாய்ந்தவிழா விண்ணவருங்
காணியவந் தோயாக் கலைசையே—யாணவமாம்
பாம்புயங்கவாட்டினார் பைம்பொற்பொதுவரங்கின்
மேம்புயங்க வாட்டினார் வீடு.

(இ-ள்.) மாண்நிலைமை - மாட்சிமைதங்கிய நிலைமையையுடைய, வாய்மையரும்-உண்மையாளரும், காணி-காணியளவேனும், அவம்-குற்றத்தில், தோயா-பொருந்தாத, கலைசை-, விண்ணவரும்-தேவரும், வாய்ந்தவிழா-பொருந்திய மஹோற்சவங்களை, காணிய - தரிசிக்க, வந்து ஓயா-வந்து நீங்காத, கலைசை-, ஆணவமாம்பாம்பு - ஆணவமென்கிற பாம்பை, உயங்கவாட்டினார் - வருந்தக் கெடுத்தவரும், பைம்பொன்-பசிய பொன்னாலமைந்த, பொது அரங்கில் - (யாவர்க்கும்) பொதுவாகிய ஞானசபையில், ஆட்டினார்-நிருத்தஞ்செய்பவருமாகிய இறைவரது, வீடு-, எ-று. (88)

வேரிமலர்ப் பண்ணையிலு மெய்ச்செல்வர் மந்திரமுங்
காரணக்கூ ழோங்குங் கலைசையே—வீரமெல்லாம்
மாளத் திகிரியான் மார்பொருவனைப்பிளந்த
காளத் திகிரியான் காப்பு.

(இ-ள்.) வேரி-தேன்பொருந்திய, மலர்ப்பண்ணையிலும்-பூக்களையுடைய வயல்களிலும், கூழ்-பயிர்கள், கார் அண்ண-மேகம்வருஷிக்க, ஓங்கும் - உயர்ந்துவளரும், கலைசை-, மெய்ச்செல்வர் - அழியாத செல்வத்தையுடைய தனவான்களின், மந்திரமும் - வீடுகளிலும், காரணம்கூழ்-(தேகம் நிலை

பெறுதற்குக்) காரணமான உணவு, ஓங்கும் - விசேஷித்திருக்கும், கலைசை-, ஒருவனை - சலந்தராசுரனென்பவனை, வீரம் எல்லாம் மாள-வீரமெல்லாம் அழிய, திகிரியால்- சக்கரத்தால், மார்பு-(அவனது) மார்பை, பிளந்த்-, காளத்திகிரியான் - காளத்திமலையி லெழுந்தருளிய இறைவரது, காப்பு-, எ-று. (89)

தூக்கணங்கன் ஞர்திருக்குந் தூக்குரைக்கு மாக்கணமுங்
காக்கணங்க ளாருங் கலைசையே—தாக்கணவும்
ஆதிவரா கத்தா னளப்பரிய சேவடியான்
மாதிவரா கத்தான் மனை.

(இ-ள்.) தூக்கு - கூத்தினைச்செய்யும், அணங்கு அன்னார்-தேவமாதர்களையொத்த பெண்களின், திருக்கும் - கண்ணும், காக்கணங்கள் - காக்கணம்பூப்போல், ஆரும்-பொருந்தும், கலைசையே-, தூக்கு - பாட்டினை, உரைக்கும்-பாடும், மாகணமும்-வண்டுக்கூட்டங்களும், காகண் - சோலையிடத்து, அம்கள்-அழகிய (மதுரமான) மதுவை, ஆரும்-உண்ணும், கலைசை-, தாக்கு அணவும் - மோதுதலைப்பொருந்திய, ஆதிவராகத்தான் - முள்ளம்பன்றி யுருவங்கொண்ட விஷ்ணுவினால், அளப்பரிய - தேடுதற் கருமை யான, சேஅடியான்-செவந்த திருவடியையுடையவரும், மாது இவர் ஆகத்தான்-உமையம்மை பொருந்திய தேகத்தையுடையவருமாகிய இறைவரது, மனை-, எ-று. (90)

ஆனகரு மேதிகளு மாயுமிசை யோருமிக்குக்
கான முழக்குங் கலைசையே—மானமறப்
பற்றிப் பரசினர் பாசத் தளைகளையும்
வெற்றிப் பரசினர் வீடு.

(இ-ள்.) கருஆன-கருமையான, மேதிகளும் - எருமைகளும், இக்குகானம்- கருப்பங்காட்டை, உழக்கும்- கெடுக்கும், கலைசை-, ஆயும்இசையோரும்-சங்கீதசாஸ்திரத்தையாராய்ச்சிசெய்யும் பாடகர்களும், கானம்-இராகத்தை, முழக்கும்-பாடும்,

கலைசை-, மானம்அற-தேகாபிமானம் நீங்க, பற்றி-தம்மையே தஞ்சமாகப்பிடித்து, பாசினார்-திக்கு மடியவர்களின், பாசத்தளை-பந்தமாகிய கட்டை, களையும் - நீக்கும், வெற்றிபாசினார்-வெற்றிபொருந்திய மழுவாயுதத்தையுடைய இறைவரது, வீடு-, எ-று. (91)

செம்மலர்ப்பூம் பொய்கைகளுங் தேம்பொழிலிற் கொண்மூவுங்
கம்மிக் குலவுங் கலைசையே—தம்மையறி
தொண்ட ருளக்கமலர் தோத்திரஞ்செய் வாரன்பு
கண்ட ருளக்கமலர் காப்பு.

(இ-ள்.) செம்மலர் - செந்தாமரைப்பூக்கணிறைந்த, பூம்பொய்கைகளும் - அழகிய தடாகங்களிலும், கம்-நீர், மிக்கு-மிகுந்து, உலாவும்-பொருந்தியிருக்கும், கலைசை-, தேம்பொழில்-தேன் ஒழுகும் சோலையினிடத்து, கொண்மூவும் - மேகமும், கம்மி - நெருங்கி, குலாவும் - சஞ்சரிக்கும், கலைசை-, தம்மை அறி - தம்மை உணர்ந்த, தொண்டர் உளம்கமலர்-அடியவர்களி னிருதயத்தாமரையி லெழுந்தருளியிருப்பவரும், தோத்திரம்செய்வார் - துதிசெய்யு மடியவர்களின், அன்பு கண்டு-அன்பினைப்பார்த்து, அருள் - அவர்களுக்குக் கிருபை செய்யும், அக்கு-என்புமாலையையணிந்த, அமலர் - மலரகிதருமாய இறைவரது, காப்பு-, எ-று. (92)

திங்கணுத லார்குழலிற் செங்தேன் கழனியிற்சேர்
கங்கங் கறுக்குங் கலைசையே—கொங்கிமயக்
கொம்பா ரிடத்தினார் குண்டுவயிற் றுக்குறுந்தாள்
வெம்பா ரிடத்தினார் வீடு.

(இ-ள்.) திங்கள் - பிறைச்சந்திரனையொத்த நுதலார்-நெற்றியையுடைய பெண்களின், குழலில்-கூந்தலில், கங்கம் கறுக்கும் - சீப்புகள் கறுக்கின்ற, கலைசை-, கழனியில்-வயல்களில், சேர் - நிறைந்துள்ள, செங்தேன் - செவந்ததேன், சங்கு-கரையை, அங்கு - அவ்வயலினிடத்து, அறுக்கும்

(பெருகிவழிந்து) அறுக்கும், கலைசை-, கொங்கு - இயற்கை, மணம்வீசும், இமயம்-இமயமலையிற் பிறந்த, கொம்பு-பூங்கொம்பினையொத்த இடையினையுடைய உமையம்மை, ஆர்-பொருந்திய, இடத்தினர் - இடதுபாகத்தையுடையவரும், குண்டு வயிற்று-ஆழ்ந்த வயிற்றினையும், குறுந்தாள்-சிறிய கால்களையுமுடைய, வெப்பாரிடத்தினர் - கொடிய பூதப்படையையுடையவருமாகிய இறைவாது, வீடு-, எ-று. (93)

எட்டுறுபோ கத்தாரு மீர்ங்குமுத முஞ்செய்ய
கட்டிலணை யிற்சேர் கலைசையே—உட்டியா
னத்துவ சத்தினர் நாயேனை யாண்டவிட
பத்துவ சத்தினர் பற்று.

(இ-ள்.) எட்டுஉறு போகத்தாரும் - அஷ்டைஸ்வரியமுடையவரும், கட்டில் அணையில்சேர் - சப்பாகூடமஞ்சத்திற் பொருந்தும், கலைசை-, ஈர்ங்குமுதமும் - குளிர்ச்சிபொருந்திய குமுதமலரும், செய் அகட்டில்-கழனியின் மத்தியிலும், அணையில்-கரையிலும், சேர் - தங்கியிருக்கும், கலைசை-, உள் தியானத்து-மனதிற் செய்யுந் தியானத்துக்கு, வசத்தினர் - வசமானவரும், நாயேனை-நாயினுங் கீழ்ப்பட்டவென்னை, ஆண்ட-ஆட்கொண்ட, இடபதுவசத்தினர்-இடபக்கொடியை யுடையவருமாகிய இறைவாது, பற்று-, எ-று. (94)

மைப்பறழ்க்குக் கோவலரு மங்கையர்சொற் குக்குயிலுங்
கப்பங் கொடுக்குங் கலைசையே—துப்புறுங்கூர்
மத்தோ டணிவார் வளையிழைத்துச் சேர்த்ததவ
ளத்தோ டணிவா ரகம்.

(இ-ள்.) மைபறழ்க்கு - ஆட்டுக்குட்டிகளுக்கு, கோவலரும் - இடையர்களும், காப்பு - கிளைகளை, அங்கு - மேய்க்குமிடத்து, ஒடுக்கும்-ஒடுக்கிக்கொடுக்கும், கலைசை-, மங்கையர் சொற்கு - பெண்களின் சொல்லுக்கு, குயிலும் - குயில்களும், கப்பம்கொடுக்கும் - (தோற்றுவிட்டதாக) திறைகொடுக்

கின்ற, கலைசை-, துப்புஉறும்-வலிமைபொருந்திய, கூர்மத்து ஓடு -, ஆமையின் ஓட்டை, அணிவார்-தரிப்பவரும், வளை-சங்கை, இழைத்துசேர்த்த-செதுக்கிப் பொருத்திய, தவளம்-வெண்மையான, தோடு-குழைகளை, அணிவார் - அணிபவரு மாகிய இறைவரது, அகம்-, எ-று. (95)

சுந்தரஞ்சே ராடவருஞ் சூதுமுலை யார்குழலுங்
கந்தனையே யொக்குங் கலைசையே—பந்தஞ்
சிதையத் துதியார் திறங்கண் டவர்தம்
இதையத் துதியா ரிடம்.

(இ-ள்.) சுந்தரஞ்சேர் ஆடவரும்-அழகுபொருந்திய புருஷர்களும், கந்தனையே ஒக்கும்-(அழகில்) குமாரக்கடவுளுக்கே யொப்பாரும், கலைசை-, சூதுமுலையார்-சொக்கட்டான்காயை யொத்த தனத்தையுடைய பெண்களின், குழலும்-கூந்தலும், கந்தனையே-மேகத்தையே, ஒக்கும் - ஒத்திருக்கும், கலைசை-, பந்தம்சிதைய-மாயாபந்தங்கெட, துதியார் - (தம்மைத்) துதி செய்யாதவர்களின், திறம் கண்டு-தன்மையினையறிந்து, அவர் தம் இதயத்து - அவர்களது ஹிருதயத்தில், உதியார்-தோன்றுதவராகிய இறைவரது, இடம்-, எ-று. (96)

எண்ணேற்ற வுத்தமரு மெண்டிசையுங் காரிகையார்
கண்ணோட்டஞ் செய்யுங் கலைசையே—பண்ணார்
சுருதிமா வாக்கினர் சுற்றுநரி யெல்லாங்
கருதிமா வாக்கினர் காப்பு.

(இ-ள்) எண்எற்ற-தியானசமாதியிலுள்ள உத்தமரும் - பெரியோர்களும், கண்ணோட்டம் செய்யும் - (பிறவுயிர்கண் மாட்டு) இரக்கம் பாராட்டும், கலைசை-, காரிகையார் - பெண்களின், கண்-கண்கள், எண்டிசையும்-எட்டுத் திக்குகளிலும், ஓட்டம்செய்யும்-பரவும், கலைசை-, பண் ஆர் - இசை நிறைந்த, சுருதி-வேதங்களாகிய, மாவாக்கினர்-பெரிய வாக்கினையுடையவரும், சுற்றும்-(காட்டில்) திரியும்,நரியெல்லாம்-

நரிகளையெல்லாம், கருதி - நினைத்து, மா ஆக்கினார்-குதிரை யாகச் செய்தவருமாகிய இறைவரது, காப்பு-, எ-று. (97)

பம்புபெரும் பாக்கியரும் பஞ்சவனக் கிள்ளையும்பூக்
கம்பலத்தி லேறுங் கலைசையே—உம்பரெல்லாம்
வந்தித்த வக்கரையார் மாதுசிவ காமிபங்கர்
பந்தித்த வக்கரையார் பற்று.

(இ-ள்.) பம்பு-நிறைந்த, பெரும்பாக்கியரும் - பெரிய தனவந்தர்களும், பூகம்பலத்தில் ஏறும்-பூத்தொழிற்செய்த கம்பளத்திற்பொருந்தும், கலைசை-, பஞ்சவன்னக்கிள்ளையும்-பஞ்சவன்னக்கிளிகளும், பூகம்பலத்தில்-பாக்குமரத்தின்குலையில்,ஏறும்-தங்கும், கலைசை-,உம்பர் எல்லாம்-தேவரெல்லாம், வந்தித்த -பணிகின்ற, அக்கர்-அக்குமணியைத் தரித்தவரும், ஐயார்-அழகமைந்த, சிவகாமி மாதுபங்கர்-சிவகாமி யம்மையாரை யிடதுபாகத்து வைத்துள்ளவரும், பந்தி - முறையாயுள்ள, தவம்கரையார் -தவத்தி னெல்லையில் நிற்பவருமாகிய இறைவரது-, பற்று, எ-று. (98)

தண்டிகையே றுஞ்செல்வர் தம்மார்பு நன்மடமுங்
கண்டிகையா ரங்கூர் கலைசையே—வண்டுளருந்
தண்டுளசித் தாமத்தன் றாரமா கப்புணர்ந்த
பண்டுளசித் தாமத்தன் பற்று.

(இ-ள்) தண்டிகைஏறும்-பல்லக்கில் ஏறும், செல்வர்தம் மார்பும்-தனவந்தருடைய மார்பும், கண்டிகை ஆரம் - கண்டிகைமாலை, கூர்-மிகுந்திருக்கும், கலைசை-, நல்மடமும் (அவர்களுடைய)சிறந்தவீடுகளும், கண்திகை ஆரம்-கண்ணைக் கூசும்படிச் செய்யும் முத்துக்கள், கூர்-(இழைக்கப் பெற்று) ஒளி வீசும், கலைசை-, வண்டு உளரும்-வண்டுகள் கிண்டும், தண் துளசிதாமத்தன்-குளிர்ச்சி வாய்ந்த துளசிமாலையைத் தரித்துள்ளவிஷ்ணுவை,தாரமாகப்புணர்ந்த-மனைவியாகச் சேர்ந்த,

பண்டுஉள-அநாதியான, சித்துஆம் அத்தன்-ஞானஸ்வரூபியாகிய விறைவாது, பற்று-, எ-று. (99)

ஐவாய வேட்கை யகன்றவருமாகதருங்
கைவாரஞ் செய்யுங் கலைசையே—மெய்வாழ்வு
நண்ணியபி ரமிதிரு நாடோறும் போற்றிடுஞ்சேற்
கண்ணியபி ராமிபங்கர் காப்பு.

(இ-ள்.) ஐவாய வேட்கை யகன்றவரும் - (மெய், வாய், கண், மூக்கு, செவி யென்னும்) ஐந்து இந்திரியங்களின் வாயிலாகவரும் ஆசை நீக்கினவரும், கை-ஒழுக்கத்துடன், வாரம்செய்யும்-அன்புசெய்யும், கலைசை-, மாகதரும்-அரசரின் புகழினையெடுத்துக்கூறுபவரும், கைவாரஞ் செய்யும்-கரகோஷஞ் செய்யும், கலைசை, மெய்வாழ்வு-அழியாச் செல்வத்தில் நண்ணிய பொருந்திய-, பிராமி-சரஸ்வதியும், திரு-இலக்குமியும், நாடோறும் போற்றிடும்-தினந்தோறும் துதிக்கும், சேல்கண்ணி -சேலையொத்தகண்ணையுடையவளாகிய, அபிராமி-உமையம்மையை, பங்கர் - இடது பாகத்தில் வைத்திருக்குமிறைவரது, காப்பு-, எ-று. (100)

வாழியதொட் டிக்கலையூர் வாழி சிவகங்கை
வாழி சிவகாம வல்லியெந்தாய்—வாழி
புகழ்ச்சிதம்ப ரேசரருள் போற்றுமவ ரன்பர்
மகிழ்ச்சியுடன் வாழி வளர்ந்து.

மூலமும் உரையும்,

முற்றிற்று.

விநோத

வேடிக்கைக் கதாமஞ்சரி.

எல்லாம் சிரிப்பு! எல்லாம் வேடிக்கை!!

ஆண் பெண் முதலிய சகலரும் மிகவேடிக்கையாக வாசிக்கும்படி தமிழ்நடையில் நூதனமாயச்சிட்டுள்ளது இதைப் படிப்பவர்கள் வயறெல்லாம் புண்ணாகும்படி கீழேவிழுந்துவிழுந்து சிரிப்பார்கள். படிக்கப்படிக்க மிக வேடிக்கையாயிருக்கும் ஆரம்பித்ததும் புஸ்தகம் முடியும் வரையில் அதைக் கீழேவைக்க மனம் வராது.

இதன் விலை அணா 6.

மில்டேரி இந்துபாக சாஸ்திரம்.

இப்பிரபஞ்சத்தில் பெரும்பாலார்மாம்ச பக்ஷணிகளாகவே யிருக்கின்றனர் அவர்கள் மாம்சத்தை நன்றாய் சமையல் செய்து புசிக்கும் பக்குவத்தைத் தெரிந்து கொள்ளும் பொருட்டுஅக்பர்பாட்சாசிவாஜி, ஸரபோஜி மகாராஜாக்களைப்போன்ற இன்னும் அனேக பிரபுக்களும் ஆவலோடு உருசியுடன் புசித்த அனேக மில்டேரி முறைகளும், சுலபமான சிலவில் விசேஷ உருசியைத் தரத்தக்க மஹம்மதியர்களது சில அருமையான பாகங்களும், மாம்ஸபட்சணம் செய்யாதவர்கட்கு உபயோகமாகும்படி மல்லிகைப்பூவாசனை அன்னம், வெங்காயத் தாளித அன்னம், மல்கோவாப்பழப்புலவு, பகாராபுலவு முதலிய சைவமுறைகளும், துவையல் ஊறுகாய்வகைகளும், பூரி, பூந்திஇலட்டுகம், தேங்குழல், ஹல்வா முதலிய பலகாரவகைகளும், சர்பத்து வகைகளையும் பலவரிய நூல்களினின்று தெள்ளிய வசனநடையில் எழுதி சற்று வாசிக்கத்தெரிந்த பெண்டுகள் ஒருவரை கேட்காமலே பாகங்களைசெய்துக் கொள்ளும்படி அச்சிட்டுள்ளது.

விலை அணா 8.

ஆசாரத்திரட்டு.

இது ஓர் அருமையான இந்துசாஸ்திரம். இந்துக்களாகிய நாம்பிரதி தினம் நடந்துக்கொள்ள வேண்டிய விதிகள் நேமநிஷ்டைகள் அனுஷ்டானங்கள் முதலிய சுமார் 200 விதிகட்குமேல் அடங்கியுள்ளன. சகலரும் அனுஷ்டிக்க வேண்டிய நல்லாசார ஒழுக்கங்களை பெரிய ...ழி நூற்களிலிருந்து மொழிபெயர்த்து ஆண் முதலிய பலரும் வாசிக்கும்படி தமிழ் வசன அச்சிட்டுள்ளது, விலை அணு 4

கைவிடார்! படிக்கப் பரமானந்தம்!!

சௌந்திரவல்லி

ஓர் அற்புதமான செந்தமிழ்க்கதை

இக்கதையானது கற்றோராலும் மற்றோராலும் அங்கீகரிக்கப்பட்டு சிறப்பைப்பெற்று வருகின்றமையால் இக்காலத்துக் கேற்றகதாநாயக மென்றே சொல்லலாம். இதிற்கண்டிருக்கும் ஒவ்வொருவிஷயமும் ஞானத்தைப் பரவச்செய்யும் சக்தி வாய்ந்தனவாயிருக்கும். இதிற் கதாநாயகனாக வரும் இராஜ குமாரனது கல்வியின்திறமும், புத்தி சாதுரியமும், கதா நாயகியின் வைராக்கியமும், கற்பிலக்கண குணங்களும், தந்திரங்களும், புருடகோலத்தின் சாமார்த்தியமும், மந்திரியின் மதியும், வணிகன், திருடர்முதலிய மற்றவர்களின் சமர்த்தும் படிக்கப் படிக்கப் பிரமானந்தத்தை விளைவிக்கும். இதை அவசியம்வாங்கி வாசிப்பது ஒவ்வொருவரின் முக்கியகடமைகளி லொன்றாகும். விலை அணா 1

எஸ். பி. கே. லால் அண்டு கம்பெனி,

சூளை, மதராஸ்.

திருவாரூர்க் கோவை.

சோழநாட்டிலுள்ள திருவாரூரின்கண் திருக்கோயில் கொண்டெழுந் தருளியிருக்கும் தியாகராயப் பெருமான்மீது திருவருணை சைவ எல்லப்ப நாவலரவர்களால் இயற்றப்பட்டது. இதில் 495- செய்யுட்களுள்ளன. ஒவ்வொரு செய்யுளும் படிப்போருடைய மனத்தை ஈசுவரபக்தியில் மிக்கிடு படச்செய்வதாயு மிருக்கிறது. இட்சுபாகமும், நாரிகேளபாகமுமாயிராமல் கதலிபாகமும் திராட்சிபாகமுமா யமைந்திருப்பதுடன், அருமையான சொல்லின்ப முதலியவைகளும், உபமான உபயோகங்களும், முன்னோர் மொழிகளுடனும் அமையப்பட்டுள்ளது. விலை அணா 8.

மங்களேஸ்வரீயம்	2	8	0
நந்தி வாக்கியம்	2	0	0
தற்கால வயித்தியபோதினி	0	8	0
அனுபோக பிரசனை ஆரூடம்	0	8	0
சர்வ ஜாதக சந்தேக நிவர்த்தி	0	12	0
சோதிட பிரபஞ்ச சேகரம்	0	12	0
கண்டிராஜன் ஒப்பாரி	0	4	0
மலையாள மாந்திரீக ரத்னாகரம்	1	0	0
மோகன சுந்தரி	0	6	0
நீல அரன் மனை	1	4	0

எஸ். பி. கே. லால் அண்டு கம்பெனி,

சூளை மதராஸ்.